# ஆதி மார்க்க னீதி மொழி

April 2023

இதழ் 21 – ஏப்ரல் 2023 வெளியீடு
© AMNA Trust, Chennai



**மூலமந்நிரம்**

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்ஙோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

**பாத பூஜை**

சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

**மகாசங்ஙல்ப மந்நிரம்**

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் ஙோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்நு மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்நு ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்நு தேவப்பிறப்பிலே பிறந்நு ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai 

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதிமார்க்க னீதி அவையின் அங்கங்களே, எதார்த்த நன்மன சற்சன மக்களே! 21 வது மலராக வெளிவரும் இம்மின்னனு சஞ்சிகை 13 அவை மற்றும் மூன்று இசை வகுப்புகளும் கொண்ட நிகழ்வாக எண்மர்களால் தொகுக்கப் பெற்று மலர்ந்து உள்ளது. எழுத்து எண்ணி படிக்க வேண்டிய ரகசியம் கொண்ட இதுவரை நம் நாவில் புழங்காத எழுத்துக்கள் கொண்ட பூரண வண்ணப்பா பாடல்களை சிறப்பாக பாடுவதற்கான பயிற்சியை இசை வகுப்பின் மூலமாக இசை ஆசரியை தாய் லாவண்யா சிறப்புடன் வழங்கியுள்ளார்.

இச்சஞ்சிகையில் உள்ள 13 அவை நிகழ்வுகளின் சிறப்பாக, மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா அவர்கள், தங்களின் தூல தேகம் விட்டு நிரந்தரராக சூக்கும தேகத்தில் குடியேறி வாழ்ந்து கொண்டு நம்மையும் வழி நடத்திக் கொண்டிருக்கும் அன்னாளின் சிறப்பு வைபவம் அவர்களின் அடக்க ஸ்தலத்திலும், நாயகன் இல்லத்திலும், மார்ச் 5ஆம் தேதி சிறப்புற நடைபெற்ற ஒன்றாக உள்ளது.

சிரம் பெருந்துறையின் சிறப்பு, மனுத்தலையின் சிறப்பு, ஆதியின் ஜோதியின் சிறப்பு, அறிவின் சிறப்பு, ஜீவனின் சிறப்பு, சிவனின் சிறப்பு மற்றும் இச்சஞ்ஞிகையின் 11, 12 ஆகிய பக்கங்களில் ஊன்றி கவனிக்க வேண்டிய வேத முடியாகிய அலிப் லாம் மீம் என்பதன் சிறப்பும் இச்சஞ்சிகையினுள் பொதியப் பெற்றுள்ள சிறப்புகளாகும். இத்தனை சிறப்புகளையும் பெற்ற ஆதிமார்க்க னீதி அவையின் மக்கள் தன்னைப் போன்றே இன்னொருவரை உண்டாக்கும் காலம் சிறப்புக்கெல்லாம் சிறப்பாக விளங்குவதும் திண்ணம்.

மெய்வழி ஆண்டவர்கள் தங்களின் வேதாந்தத்தில் ஆண்மையர் அனைவரும் வாருங்கள் வாங்கோ! அகர முதல் வாங்க வாங்கோ! அவ்வுமுதலும் வாங்க வாங்கோ என அருளிய வசந்த அழைப்பு மெய் வழியின் வாயிலாக, இன்று ஆதி மார்க்க னீதி அவையின் மூலமாக உலகிலுள்ள எளிய மக்களும் இச்சிறப்பெலாம் பெறுவதற்கான ஒரே நோக்கமுடன் இயங்கிக் கொண்டுள்ளது.

**தேச மெங்கும்சி றந்துசெ ழிக்கவே**
**தோசமுற்றும்சு ருண்டுதொ லையவே**
**ஓசை யோங்காரப் பையுற வின்மனு**
**ஈச னானம தியெழுத் தேயிது**



Copyright © AMNA Trust, Chennai 

இப்படிக்கு சாலை ஆண் குரு. என ஆண்டவர்கள் திருவாய் மலர்ந்து அருளிய இந்நிலைகளை எல்லாம் தேடுதல் உள்ள நன்மக்கள் யாவரும் இந்த அகர முதலும் அவ்வு முதலும் பெற்று வாழ்வாங்கு வாழ எல்லாம் வல்ல பரிசுத்த ஆவி தெய்வம் பிரம்ம பிரகாச மெய்வழிச் சாலை ஆண்டவர்களின் திருவடிகள் போற்றி வணங்கி, இம்முத்திப் பேருரையை மீண்டும் முழங்குவோம் நாம்.

நமஸ்காரம்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

*"அல்ஹம்துலில்லாஹ்" என்று சொல்லிக் கொடுத்தால் கிளி அப்படியே சொல்லும். ஆனால் பூனை வந்நதும் 'கர்' என்றுதான் கத்தும். அதே போன்று உன்னிடம் இஸ்ராயில் (எமன்) வருவானானால், உன் வாயிற் சொல்லும் மந்நிரங்ஙள் எல்லாம் போய், கரட்டுக் கரட்டு என்றுதான் இழுக்கும். அவனது ஒரு னெருக்கில் முழுக்கு வெளியாகிவிடும். காபர் என்ற தீர்ப்பு வந்நு விடும். அவ்வாறு வராமல் தடுக்கின்றவர்களே கலீபாக்கள். செத்த பிறகுதான் எல்லாம் என்று உலகக் குருமார்கள் சொல்லுவார்கள். அதெல்லாம் தங்ஙள் வயிற்றுப் பிழைப்புக்காக மக்களை ஏமாற்றும் வித்தையே.*

*இறைவனால் இப் பூமிக்கு அனுப்பப் பெற்றுள்ள ஞானமேதையாகிய சற்குருபிரான் அவர்கள் இருக்கும்போதே னாம் னம்மை அறிந்நுகொள்ள வேண்டும். அவர்கள் உனக்காகச் சிருஷ்டித்துத் தருகின்ற அந்ந ஜீவ இரவில் னீ வணங்ஙி வந்ந ஆறுமுகக் கடவுள் உன் முன் வந்நு "னீ என்னை இதுகாலம் வரை வணங்ஙினாய்; எனக்குத் தேகம் இல்லை. ஆனால் என்னைப்போல் அழகு, பாக்கியம், சிறப்பு, மதிப்புத் தருகின்றவர்கள் இவர்கள் தான்" என்று சாட்சி சொல்வார்கள். இந்ந வசந்ந காலத்தைப் பயன்படுத்திக் கொண்ட பல ஆயிரம் மக்கள் எம்மிடம் இருக்கிறார்கள்.*

*உன்னைப்போல் தேகியாக வந்நு, பரத்தினுடைய லட்சணமாகிய சாகாக்கல்வி என்ற தெய்வீகக் கல்வியையும் கற்று, இகத்தின் லட்சனத்தை உன்னைப்போல் இரண்டு மடங்ஙு கற்றுத் தேர்ந்நவர்களே ஜீவ பாதையைக் காட்டுகிற மெய்க் கல்வியை உனக்குப் போதிக்க முடியும். சிவலோக பதவியை உன் தலையில் சூட்டுகிற அப் பாரவான்ஙளுக்கு ஒப்பு உவமை ஏது? னீ ஒரு ராஜாங்ஙமே கொடுத்தாலும் அவர்களுக்கு அதனால் பிரயோஜனம் இல்லை. னீ அவர்களுக்குச் செய்ய வேண்டியது, உன் சத்திய ஒட்டுதலால் உன்மேல் அவர்களுடைய இரக்கத்தைச் சாயவைத்துக் கொள்வதே யாகும். பொய்க் கல்வியாகிய ஐ.ஸி.எஸ் படிக்க ஏழையாக உள்ளவன் போக முடியுமா? முடியாது. ஆனால் இந்ந மெய்க் கல்விக்கோ அரசனாயினும் ஆண்டியாயினும் போகலாம்; கற்றுத் தேரலாம்.*

.

***~ சாலை ஆண்டவர்கள்***



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2023 மார்ச் மாத அவை நிகழ்வுகள் – 2023 ஏப்ரல் மாத வெளியீடு

**02-03-2023 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**சத்தியம் திரண்ட சாயுச்சிய கடலே...** எனும் தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**வான்மதி கொரல் வாக்கியம் எண் 102:** துணியில் உள்ள அழுக்கை, போ என சொன்னால் போகாது. அதற்கான செயல் செய்து சுத்தம் செய்வதின் மூலமே சுத்தமாவது போல், ஜீவ வழிபாடும் அதற்குரிய செயல் மூலமே கை வரவாகும்.

**குருபிரான் அருளமுதம்:** **வாயில் சொல்லும் மந்திரங்கள் வாய் செத்த பின்னே வஞ்சு எமனுக்கு பதில் சொல்லாது** என்பது மெய்வழி ஆண்டவர்கள் திருவாக்கு. வாயில் சொல்லாமல் ஓதாமல் ஓதும் செயல் கொண்டே வேத ரகசியம் கைவரவாகிறது. ஐயறிவு வரை உள்ள ஜீவபேதங்களுக்கு அறிவு நினைவினுள்ளும், மனிதனுக்கோ அது நினைவுக்குள் நினைவாக நாத மின்னுடலாகவும் உள்ளது. ஒரு மெய்க் குருபிரான் அருளால்தான், சகல உயிர் ஜீவனிலும் ஆடும் பாதமாக, ஆன்மாவாக, நினைவாக இருக்கும், அக் கூற்றினை உதைக்கும் பாதத்தை அறிய முடியும். உணர்வாகிய **நான்** என்பது வந்து அமர்ந்த பின்பே ஐம்புல நுகர்வும் வேலை செய்கின்றது. இதனை பேசரும் வாசகம் கொண்டு அதில் ஆக்கி வைக்கும் தனிப்பெரும் கருணையே சற்குருவின் செயலாகும். ஈசனின் இருப்பிடமாகிய இதயம் வெளிச்சப் பொருளாக சிரசில் வீற்றிருப்பது ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களுக்கு வேத சாட்சியாக நிரூபிக்கப்பெறுகிறது. ஒரே வடிவான சிவலிங்கம் பல கோடி நாமம் கொண்டிருப்பது, ஐம்புல நுகர்வை அனுபவிக்கும் கர்த்தா ஒன்றானாலும் அதை சுமந்து திரியும் மக்களுக்கு பல கோடி நாமம் இருப்பதற்கு ஒப்பாகும்.

*ஜீவசகோதரி லாவண்யா* : **வந்த வேதம் வரைந்த பயத்தினால்... (ஞான அகவல்)** ஞானத்திற்கான மெய் ஆசானின் அழைப்பே ஞான அகவலாகும். வீணர்கள் கையில் சிக்கி இழந்த நம் வாழ்நாளை அபய கரத்தின் மூலம் மீட்டு நல நாளாக ஆக்கும் குருவே நந்தி. சிவனே மகா நந்தீஸ்வரர். சிலாதர், சாருலட்சனையின் புதல்வரான நந்திக்கு 9 தலங்கள் உள்ளது. நந்தியாக, சிவனாக வரும் குருவின் மணியோசை எனும் நாதமே கூற்றுவன் கையில் இருந்து நம்மைக் காக்கும் ஆயுதம்.

**குருபிரான் அருளமுதம்:** **நந்தி முதல் யுகங்கோடி வாழ்ந்தோர் எல்லாம்** என மெய்வழி ஆண்டவர்கள் அருள்கிறார்கள். திருவடியாக ஜீவனெனும் சிற்றம்பலப்பொருளாக இருப்பதே நந்தி. ராமர் லட்சுமணன் இடையில் இருந்த சீதையே மனம் எனும் மாயையின் மொத்த உருவம். மாயையைத் தொடர்ந்தோர் அழிவர் எனச் சொல்வதே ராமாயணம். நடுவு நின்ற நந்தியின் மீதேறி வரும் ஈசனே பரமான்மா. **நடுவு நின்றார்க்கன்றி ஞானமும் இல்லை** என திருமூலரும், **மனமே குரு** என சிவானந்த பரமஹம்சரும் அருள்கின்றனர். புறம் போக்கான மனதை அகம் போக்காக ஆக்கி நாட்களை நல நாளாக ஆக்குபவரே மெய்க் குருபிரான்.

> *எனது னாதன் ஸ்ரீ ஜகன்னாதனாம், எனது குரு ஸ்ரீ ஜகத்குருவாம். எனது ஆத்மாவே சகல பூதங்ஙளின் ஆத்மாவாம். (ஆதலால்) அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.*
>
> ***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:*

**தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது. (திருக்குறள்)**

ஆன்மாவெனும் நித்திய பொருளே நாம் என்பதன்றி அநித்திய உடலல்ல. வள்ளுவர் அருளிய 1330 குறளும் அறிவாகிய ஜீவனைக் குறிப்பதே. தனக்கு உவமை இல்லாத தாளாக உள்ள அறிவின் வளர்ச்சியே பரிணாம வளர்ச்சி. அவரவரிடத்தும் ஆடும் பாதமாக விளங்கும் ஜீவனை, பெரியோரின் அருளால் அறியும் போதே பிறவிப்பிணி எனும் மனக்கவலை தீரும். அவரவருள் விளங்கும் பிணி, மூப்பு, சாக்காடு அணுகா சூக்கும தேகத்தைக் கைக்கொண்டால் அழிவற்ற நிலையைப் பெறலாம். உடல் உறுப்புகளுக்கு மாற்று உள்ளது போல், மாற்று இல்லாப் பொருளாகிய உயிரே தனக்கு உவமை இல்லாத தாள்.

**குருபிரான் அருளமுதம்:** பரிணாம வளர்ச்சி என்பது மனிதனிடத்தில் அறிவின் வளர்ச்சியன்றி, குரங்கு மனிதனாவதல்ல. மனிதனைப் போல, பயணிக்கும் சாதனத்தை எவ்விலங்கும் கையாளவில்லை. உருவமற்ற ஈசனுக்குரிய திருத்தாள் இன்னதென, ஆன்மாவின் ரகசியம் அறிந்தோரே அறிவர்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **அழகு அணி சித்தர் பாடல்**
**எட்டாப் புரவியடி யீராறு காலடியோ
விட்டாலும் பாரமடி வீதியிலே தான்மறித்துக்...**

மனதை அடக்கியாளும் ரகசியமே இப்பாடல். மாயக் கூத்தாகிய மனமே புரவியாக, மாயை எனும் மயிலாக உள்ளது. ஈராறு காலடி என்பது சூரியனாகிய மனதை சுற்றியுள்ள 12 ராசியாக 12 மாதமாக மனிதனின் காலசக்கர ரகசியமாக உள்ளது. அட்டான தேசம் என்பது எண்சாண் உடம்பாகும். மெய் உணர்வு கொண்ட மனம் நித்திய மகிழ்ச்சியாகவும், பொய் உணர்ச்சியான மனம் நித்திய துக்கமாகவும் உள்ளது.

**குருபிரான் அருளமுதம்:** எட்டாப் புரவியான மனதை அடக்கிப், பழகியே சவாரி செய்ய முடியும்.

*ஜீவசகோதரர் சிரஞ்சீவி :*

**இகநிலைப் பொருளாய் பரநிலைப் பொருளாய்
அகமறப் பொருந்திய அருட்பெருஞ்ஜோதி (அருட்பெருஞ்ஜோதி அகவல்)**

இக பர உலகிற்கு முதற் பொருள் தேகமே. அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பது, அரூபத்தில் உள்ள பரம்பொருள் இயக்குகின்ற இத்தேகமே. மனம் அநித்திய பொருளை நாடுவதை, வள்ளலார் **கண்டதெல்லாம் அனித்தியமே கேட்டதெல்லாம் பழுதே** என அருள்கிறார். உள்ளத் தெளிவாகிய நிம்மதி வேண்டியே பெரியோர்கள் அலையாது, நழுவாது, மயங்காது, சலியாதிரு மனமே என இறைஞ்சுகின்றனர். நினைவே பராகாசமாக, மகா காரணமாக, வினை முதல்வனாக உள்ளது.

**குருபிரான் அருளமுதம்: அமுதகலை ஞான போதம் - இரண்டாம் காண்டம்:**

**விளங்கும் எந்தன் ஞானசபை...** பாடல் முதல் **னிற்பதுவே பணரதுவும்...** என்ற பத்து பாடல்கள் அமானிதத்தின் சிறப்பையும் தளிர், இலை, பூ, காய், பழம் என ஐந்து நிலைகளுள்ள தலை கீழ் மரமான ஓரறிவாகிய விஸ்வச்சுலா மரத்தையும் கூறுவதாக உள்ளது. அது மனிதனிடத்தில் தலையில் இருக்கும் போது பரமாத்மா என்றும், உணர்வு உகார ரகிதம் என்றும், ஐம்புலன் வழியாக இயங்கும் போது உணர்வாகவும், **நான்** என்றும் பெயராகின்றது.



Copyright © AMNA Trust, Chennai

நிஜ நாத உடம்பாகிய ஆறாவது அறிவை அறிந்து, மனம் அலையாமல் பாதுகாப்பதே பிரம்மவித்தையாகும்.

64 கலைகள் கொண்ட மனதிற்கு மேலான நயனக் கலையே மூன்றாவது கண். மதியை விட்டு தந்தையின் நினைவு தொட்டு கருவில் உருவானதால் விதியாகிய சாவுக்கு ஆளாகிறோம். விதி எழுத்தை மாற்றி மதி எழுத்தை பதிப்பிக்கும் செயலே முரீது. தன்னுள் இருக்கும் ஜீவ உலகின் விடிவே விஸ்வரூபமாக, விசுவநாதமாக விளங்குகிறது. தூங்காமல் தூங்கி, ஒமென, ஊமையென, உணர்வென, ஓரறிவு மரம் போல் நம்மை சுற்றி நடப்பதறியாமல் தான் தானாகி நிற்பதே இறைநிலை. ஓசையாகிய காற்றாலும், ஒலியாகிய ஆகாயத்தாலும் உண்டாகிய உலகத்தையே ஓசை ஒலி அனைத்தும் அது பொதிந்ததென அருள்கிறார்கள். அமானிதமாகிய அறிவும், எழு கூரான ஏழ் வகை பிறப்பும் நாம் கொண்டதால் விதியை தாண்டுவது நமது கடமையாகிறது. இருட்கோள வடிவான கலிமா பொருளை ஆறறிவும் சேர்த்து விழுங்கி ஏழாம் பிறப்பு நல்கும் குருவின் துணைகொண்டே அறிய இயலும் என அருளி, தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

**04-03-2023 ~ சனிக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்**

**அரியானை அறியவைத்து அந்நணனா**
**யெனைப்பிரட்டிப் பிறப்பித் தாரும்...** என்ற தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:*

**அந்ந னாளில் அணைத்தெனை யாட்கொண்டு**
**விந்நை வீசும்வி ரிகதிர் ஏற்றியே...**

இறைவனாக, தாயாக, தந்தையாக, குருவாக விளங்கும் ஆசான் அவர்களே மனதின் பிடியிலிருக்கும் நம்மை பேரிரக்கதோடு ஏற்று, விந்தை வீசும் வாக்கு விரிகதிரின் மூலம் கந்தம் வீசும் கலாபமாக நம் செவிக்குள் பாய்ந்து, நம் கோதெல்லாம் அறுத்து பேரின்பத்தை அடையச்செய்கிறார்கள்.

**னல்ல னாள்:** மனிதனுக்குத் தேவையான, னல்ல காலம் இறைவன் கொடுத்த னாளுக்குள்தான் அடங்கியுள்ளது. அத்தகைய நமது வயது வாழ்னாளாகிய காலத்தை வீணாக்காமல் மேலவர் இடத்தில் சார்வதே னல்ல னாள். இதை அறியாத நாளெலாம் வீண் நாளே.

**நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்**
**வாள துணர்வார்ப் பெறின்** என்ற வள்ளுவரின் வாக்கின்படி ஆசான் அவர்களே நமது வீணாகும் வாழ்னாளைக் காட்டி நம்மை அதிலிருந்து மீட்கிறார்கள். இதனை சாலை ஆண்டவர்கள், **உள்ளது னூறே யாண்டிலிளமையி லீராறு போகும்...** என்ற ஞான முறையீடு பாடலில் நாம் உய்வதற்கான வழிவகை அருளியுள்ளார்கள். ஆசான் அவர்களே தெய்வக் கண்ணாடியாக வந்து நம்மிடத்தில் இருக்கும் அழியாப் பொருளை அறியவைத்து அந்தணனாக நம்மை மாற்றி பேரின்பப் பெருவாழ்வில் புகுத்துகிறார்கள்.

**அந்தணன்:** சர்வத்தையும் தன் மயமாக்கும் தீயின் தணல் போல் ஆசானின் அறிவுத் தீயின் தன்மையாக ஆகிக் கொண்டவனே அந்தணன் எனும் பிரம்மத்தை அறிந்த பிராமணன். அத்தகைய பிரம்மப் பிரகாச ரூபகராக உள்ள ஆசான் அவர்களே, தன் வாக்கு தீயின் மூலம் நம் அறியாமை என்னும் இருளகற்றி, அவரவரின் சொந்த இடமான சாலையில் குடி ஏற்றி வைக்கிறார்கள்.

**புனர்ஜென்மம்:** காலம் கடந்த காருண்ய மூர்த்தியான ஆசானின் விஸ்வரூப தரிசனையை நாம் காண்பதே புனர்ஜென்மம். இதனை பேயாழ்வார் அவர்கள்,

**திருக்கண்டேன்**
**பொன்மேனி கண்டேன்**
**திகழும் அருக்கன்**
**அணிநிறமும் கண்டேன்**


Copyright © AMNA Trust, Chennai

**செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன்
புரிசங்கம் கைக் கண்டேன்
என் ஆழி வண்ணன்பால் இன்று!** என அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் பார்த்தீபன் :* மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனும் அந்தகரணக் கூட்டத்தில் உள்ள அகங்காரத்தை ஆசான் தன் அருளால், அழியாத ஓங்காரமாக்கும் உபாயத்தை அருள்கிறார்கள். அப்படி மாறிய ஓங்கார நிலையையே சத்திய வேதத்தில் **நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிறேன்** என அருளப்பெற்றுள்ளது. ஜீவன் அவாவுடன் தாவும் பொழுது மனமாகிறது. அத்தகைய மனதை ஜாதிக் குதிரையாக மாற்றி அதில் ஏறி சவாரி செய்தால் பிறவிப் பிணி தீர்க்கலாம். ஒரு புள்ளியில் இருந்து விரிந்த இத்தேகத்தை ஆசான் தன் அருளால் மீண்டும் அதே புள்ளியில் அடங்கச்செய்து நம்மை பேரின்பத்தில் குடியேறச் செய்கிறார்கள்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* இவ்வுலகிற்கு நாம் மரணவாசலின் வழியாக வந்து, மரணத்தை நோக்கியே செல்கிறோம் என்பதை ஓர் மெய் குருபிரானின் முன்னிலையில் தான் அறிய முடியும். மனம்வழி சென்றுக்கொண்டிருந்த நம்மை, அறிவின் வழியாக மாற்றும் ஆசானின் அருள் பொழியும் முகூர்த்த நேரமே னல்ல னாள் பிறப்பு எனும் பகிர்வுகளுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை னிறைவுற்றது.

**05-03-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ நாயகன் இல்லம் ~ சிறப்பு சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயாவின் 15-ம் ஆண்டு பூர்த்தி சிறப்பு அவை**

**அறங்ங ளொருங்ங்கு திரண்டொரு வீடு
வரங் னொடையின் பெருமான்...** என்ற பூரணப் புதையல் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.



பிரம்மப் பிரகாச மெய்வழிச் சாலை ஆண்டவர்கள் தன் அய்யனுடன் 23 வருடங்கள் விழி இமை சேர்க்கையினராய் வாழ்ந்தது போல், மெய்வழி குழந்தை சாமி கவுண்டர் ஐயாவின் திருவடி நிழலில் 29 வருடங்கள் குருகுலவாசம் பயின்று, தாம் பெற்ற சிவா அனுபவங்களையும், இனிமையான தருணங்களையும், குருபிரான் அவையில் பகிர்ந்து கொண்டார்கள்.

மக்களை உய்விக்கவே பெரியார் எனும் பிரம்ம பீடமானது இன்னிலவுலகிற்கு வந்து கொண்டே இருக்கிறது.**அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல்** என்ற குறளின் படி அன்பெனும் பிடியால் பெரியோர்களைப் பணிவதன் மூலம் தமர் வாசலுக்குள் னுழைய முடியும்.

திரேதாயுகத்தில் இராமபிரான் சரயூ நதியில் தன் னிலையற்ற தேகத்தை விட்டு சென்றது போல், அவதார மூர்த்திகள் அனைவரும் தன் தேகத்தை துறந்து செல்கிறார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

ஆனால் இப்பூமண்டலத்தில் வாழும் காலத்தில் தம் தவ வல்லபத்தால் அழியாப்பதியில் குடியேறி, தன்னை சார்ந்த மக்களையும் ஒழுக்க நெறியுடன் வேதவழியில் வாழச்செய்து ஞானோபதேசம் மூலம் உலக மும்மல ஒட்டுதலை நீக்கி மனதை செம்மை ஆக்குகிறார்கள். ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலச் சேற்றில் சிக்கி வீணாகும் நம் வயது வாழ்நாளை மீட்டு, உயிரினும் மேலான ஒழுக்க நெறியில் வாழ வைக்கும் அருட்குருவிடம் அடைக்கலம் புகுந்தவர்களே அமைதியான, தெளிவான மகிழ்ச்சியான வாழ்வு வாழ முடியும்.

செங்கமலத்தாயாக வந்து சின்மயத்தைக் கொண்டு எந்த உவமானத்திற்கும் பரிசீலனைக்கும் எட்டப்படாத வித்தில்லா வித்தினை நம் நினைவில் ஊணி உயிராணியை உணர வைக்கும் மெய்குருவின் அருள் பெற்றவர்களே, ஜோதி சொரூபமாக, நித்திய சூரியர்களாக, ஒளிதேகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் பெரியோர்களை அறிவுக்கண் கொண்டு காணமுடியும் என்ற ஆசீர்பாத ஒலி வாயுரையுடன் ஆசான் அவையை நிறைவு செய்தார்கள்.

## 09-03-2023 ~ வியாழக்கிழமை சபை
## தொகுப்பு: ஸ்ரீமதி. விஜயசித்ரா

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஆசீர்பாதத்துடனும், **தன்னேழின்னபு சின்புறமேவுற...** என்ற தோத்திரப் பாடலுடனும், அமானிதமெனும் அறிவை விரித்துரைக்கும் அவை நிகழ்வுகள் மலர்ந்தன.

**வான்மதிக் கொரல் வாக்கியம் :103** **வேத வேதிய நாத புராதன...** என்ற பாடலைத் தொடர்ந்து ஆண்டவர்கள், கலியுக காலம் முடிந்த பின்னும் கலியாக இருக்கும் பாவம் என்பது கசப்பு வெளியாகிச் சாவதுவே. இவ்வெல்லையில் அப்பாவம் இல்லை. இனி வரும் மெய்க் கிரேதாயுகம் னித்திய யுகமாக விளங்கும் என்பது மெய்.

**குருபிரான் அருளமுதம்:** மெய் எனும் தர்மயுகம் காணா மனுத்தலையே கலியாக விளங்குகிறது. எழுதாத எழுத்தாக வரும் ஆசானின் நாதமே கலியுகத் தலையை துகள் படுத்தி அதனை செழிக்கும் தர்மயுகத் தலையாக மாற்றுகிறது. **விளங்நுமென்றன் ஞானசபை மலர்ந்நு ஓங்ங...** முதல் **னிற்பதுவே பணரதுவுந் நலைகீ ழாக...** என்ற அமுதகலைக்ஞான போதம் இரண்டாம் காண்டம் பத்தாவது செய்யுள் வரை உள்ள பாடல்களின் பரிசுத்த உட்பொருளை விளக்கித் தர வரும் பாரவான்களின் செழுஞ்ஞீதள மனோ னோக்கிற்கு இணங்கி மக்கள் அதனை அறிந்து கொள்வார்களாக என ஆண்டவர்கள் ஆசீர்பாதமாக அருளியுள்ளார்கள்.

**கலை, காலம், நியதி, வித்தை, புருடன், மாயை, இராகம்** என்ற எழுவகை வித்யாதத்துவமெனும் அமானிதம் எல்லோருக்கும் பொதுவானது. சர்வ மக்களின் தாகம் தீர்க்கும் தடாகமே மெய்வழிச் சாலை. தன் தன் மதத்துள் இருக்கும் அமானிதம் மெய்யாவதும் பொய்யாவதும் அவரவர் கையில் உள்ளது. பாத ரகசியம் அறியாத கல்லாதவர்களும், கற்கும் கல்வியான மெய்க்கல்வியைக் கல்லாதவர்களே, முகத்திரண்டு புண்ணாகிய கண் உடையவர். ஆண்டவர்கள் அருளிய **இலஞ்னுழி சுழித்து...** என்ற பாடல் உணர்த்துவது, சிவமயப் பொருள், ஓதாமல் ஓதும் வேதம், எழுதாத எழுத்து, கூறாத அட்சரம், னீதி எனும் பொருள், பஞ்ஞாட்சரம் என்பதாக உள்ளது. பஞ்சபூதங்களும், அதன் பஞ்ச கர்த்தாக்களும் அவற்றின் சக்திகளுமின்றி உலகும் உடலும் இல்லை எனும் சாட்சியே, **மானுடராக்கை வடிவு சிவலிங்கம்... மானுடராக்கை வடிவு திருக்கூத்தே** எனும் திருமந்திரப் பாடல்.

பஞ்சபூத தலங்களும் அதன் நிறங்களும், சபைகளாக விளங்கும் கோசங்களும், வடிவங்களும், அறிவைப் பெற்று நமச்சிவாயமாக மாறும் செயலைக் குறிக்கும் அமானித தத்துவங்களாக உள்ளன. இப்படியான **பொன்மேனி மின் வீசும் புகழுடம்பின் செய்கை சொல சொல்லுக் கடங்காது சுருதியிடம் கொள்ளாது**. மேலும் நியதிகளான **16,12, 8, 4, 0** என்ற அளவுகள் குறிக்கும் **சோடசம், ராசி, அகரம், கைம்முதல், சூன்யம்** யாவும் குருமுகமாக



Copyright © AMNA Trust, Chennai 

அறியவேண்டிய விந்துநாத ரகசியமாகும். அடக்கம் மடக்கி பிடிக்கத் தெரிந்து அவ்வானவர்களே அனந்தர்கள். ஆதிமான்மியம் பக்கம் 101ல் கூறப் பெற்றுள்ள ஜீவனின் ரகசியம், தாத்து, உணர்வு, சத்து, ஆவி, அவ்வு, வேகாக்கால், குணம், கலை, சிற்சபை, அறிவு, கவனம் யாவும் அவ்வுகை வசமாகும் பொழுது ஜீவாத்மா பரமாத்மா ஒன்றாகச் சேர்ந்த சிபத்து, உகாரரஹிதம், சத்தினி, சுத்தாவி, அகரம், சாகாத் தலை, குணானயன்மி, கலாமலி, பொற்சபை, அறிவாகாரம், கவனாதி என்றாகிறது. வேகாக்காலுடன் சேர்ந்தால்தான் சாகாத்தலை கைவரவாகும்.

**தலைக்கு மேல் கால் கண்ட தலையைக் கேளு** என்பதே பாத சிறப்பைப் பகிரும் பத்துப் பாடல்களின் ரகசியம். னற்றுணை தாளாக, விந்து நாதமாக, வித்யா அவித்யா பாதமாக விளங்கும் அமானிதத்தை கலை, கதலி, கற்பம், ஏழ்நிலைக் கம்பம், ஆதி, அனாதி என பல நாமங்களாக மெய்வழி நூலில் ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். இதனை அறிந்த மனிதன் அதை தன்னிடத்தில் செயலாக்கும் போது தேவனாகிறான். பாதம் என்ற பெருநிலை வைப்பின் மூலம் நம் வினை தீர்க்கும் குருவே விநாயகர். அவரே ஆறறிவும் சேர்த்து ஒன்றான மணிவயிறெனும் தேவமணிச் சூலில் நம்மை தேவப் பிறப்பாக பெற்று எடுப்பதால் தொந்திக்கணபதியாக இருக்கிறார்.

அமுத கலைக்ஞான போதம் இரண்டாம் காண்டத்தின் பத்து செய்யுள்களும் அலீபு லாம் மீம் என்ற முப்பொருள் கோல விளக்கத்தைக் கூறுவதாகவே உள்ளது. **ஆட்சி புரிந்து எமையாண்ட அம்மை பாதம்** என விளங்கும் பஞ்சாட்சரத்தின் சிறப்பை அவரவரும் அனுபவத்தால் அறியும் போதே ஐங்காய அவிழ்தமாக தித்திக்கும். **அறிவதனைக் கொண்டு அறிவதனைக் கண்டு...** என்ற பிஸ்மில் குறத்தின் திருவார்த்தைகள் நிஜமாவதற்கான சாட்சியாக, பிரம்மப்பிரகாச பரம்பொருள் பரிசுத்த ஆவித் தெய்வம் ஆண்டவர்களின் ஆசீர்பாதமும் குழந்தைசாமி ஐயா அவர்களின் ஆசீர்பாதமும், தோன்றாத் துணையாக, நம்முடன் இருந்து ஜோதி சொரூப அறிவு வடிவாக நம்மை ஆக்கிக் கொண்டிருப்பது சத்தியம் என குருபிரான் அருளியதைத் தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

## 11-03-2023 ~ சனிக்கிழமை சபை
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

**குருபிரான் அருளமுதம்:**

**வித்ததில் மரமாய் மரமதில் வித்தாய்...** என்ற குருமணிமாலை பாடலுடன் அவை உதயமானது. வித்தில்லாத சம்பிரதாயம் மேலும் இல்லை கீழும் இல்லை. நமக்கு வித்தாக உள்ள பஞ்ச பூத தத்துவங்களுக்கும் தலைவனாகிய வித்தில்லா வித்தாகிய இறைவனை அறிவதே கலிமாவாகும்.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் – 121:** மோனம் என்பது சுவாசம் ஓடாது நிற்கும் ஏகராசிக் குவியல் நிலையாகும். குருவின் திருவருளால் அஞ்ஞான மயக்கத்தில் இருக்கும் மனம் தெளிந்து, வேத வேதாந்த ரகசியம் இருக்கும் ராசி நிலையறிந்து, பாழிலே போகும் வயதினை மீட்டு, தன்னிலை கண்டு உணர்வதே மெய்ஞானமாகும். மனிதனின் ஓர் அங்குல மூச்சினுள் இருக்கும் ராசி நிலைகள் அனைத்தும் ஏகராசி எனும் ஒரே கால் ஆக்கிக் கொள்ளும் செயலே முரீது என்பதையும் ஆண்டவர்கள் **இடவலம் சுழினையெ முந்தறு கோணத்தி டமுரீ தாகும்** என அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரி லாவண்யா :* **முந்ந னாளினில் மூண்டஅ கவலும்... (ஞான அகவல்)** பூமி தோன்றிய நாள் முதல் முதலாக இருப்பவர் புராதனராகிய குருபிரான். முன்னாளில் என் வாழ்நாள் வீணாவதை அறியாமல் இருந்த எனை, இந்நாளில் ஆட்கொண்டு மகா மகசூக்கான இருதயத்தைப் பிரகாசமாக்கி வைத்து மெய்ஞான விருட்சத்தை என்னுள் விளைவித்து, **சென்றனாட் சென்றிட் டாலும் செல்லுனாட் சென்றிடாது னன்றுள னாளே யின்னாள்**



Copyright © AMNA Trust, Chennai 

**ஞானனாளெனத்தேர்ந் நுள்ளம்** என முன்பின் இல்லாத நாளாக, என்னாளும் திருநாளாக ஆக்கி வைத்த என்குருவே நந்திபகவான்.

**குருபிரான் அருளமுதம்:** பிறப்பால் அனைவரும் சூத்திரன். மெய்க் குருபிரானால் உபநயனம் பெற்று காயத்ரி மந்திரம் அறிந்து தொழும் போதே பிரம்மத்தை அறிந்த பிராமணன் ஆகிறான் என்பது வேதவாக்கு.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **பரிசுத்த வேதாகமத்தில் வேதம் பற்றிய சுவிசேஷ நற்செய்திகள்:** ஜான் 1:2:25 - நித்தியஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம்.

கொரிந்தியர் 1:14:36 - தேவவசனம், வேத வாக்கியங்கள், தீர்க்கதரிசனங்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப் பெற்ற பரிசுத்த மனுஷர்களான இறை தூதர்கள் மூலம் அருளப்பெற்றது.

பீட்டர் 2:1:20 - வேதத்திலுள்ள எந்த தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளாயிராது. பொய்யும் மெய்யும் பிரித்துக் காட்டும் அருவுருவான ஆசான் திருமேனியே, நித்திய ஜீவனை வழங்கும் நாதமாகிய வேதமாகும். ஆதி மார்க்க னாத னீதியான சமரச வேதம் அறிந்தவர்கள் ஆதி மார்க்க னீதி அவை மக்கள்.

**குருபிரான் அருளமுதம்:** திருமறையான வேதம் எச்சில்படாத பரிசுத்தமானது. அமானிதம் எனும் மெய்ப்பொருளை, திருவெனும் அட்சரமான னற்றாளை அறிவிக்கும் சுத்தத் திருவடி பற்றித் தொழுது ஐவழி விளைவின் அப்பாலாகிய செய்வழிகாட்டி உய்வழிகூட்டும் மெய்வழியின் முலமே அடைய முடியும்.

*ஜீவசகோதரர் சங்கர் :* பாதம் அறிந்தவர்களுக்கே வேதம் விளங்கும். வந்த வேதமாகிய ஆசானின் அருளால் மெய்க்கல்வி பழகி அவ்வனுபவம் மூலமே பாதரகசியம் நம்மிடம் ஆதம்பாதமாக, பிள்ளையார் சுழியாக, வலம்புரிச் சங்காக இருப்பதை அறிய முடியும். இதை அறியாதவர்களே கல்லாதவர்களாகிய கலியுகக் கலியர்கள்.

அலீபு-லாம்-மீம்: அலீபு - அகரம் - சரீரமாகவும், லாம் - உயிர் - உகாரமாகவும், மீம் - ஆன்மா-மகாரமாகவும் உள்ளது. இதனுடன் விந்து-நாதம் சேர்ந்து பஞ்சாட்சரம் ஆகின்றது. இவை அனைத்தையும் உள்ளடக்கியது அமானிதம். **அகரவு கரசி காரமுடனே அப்புறம காரமென்று ஊதூது சங்நே (ஞானச் சங்நு)**.

**குருபிரான் அருளமுதம்: அமுத கலைக்ஞான போதம் - இரண்டாம் காண்டம்:**

**துலங்ங இங்ஙு எவர்க்கு மெட்டா னிலைக ளெல்லாம்**
**துலங்ஙளட்டிப் பேசிவரும் துளப வேந்நே**

பெரியோர்கள் அமானிதம் எனும் ஞானக் கடலுக்குள் ஆழ்ந்து அகழ்ந்தெடுத்து, எவர்க்கும் எட்டா அரும்பெரும் நிலைகள் யாவற்றையும், **ஜீவதி சிம்மாச ன, மாபதி மந்நிராலய ன, தீபதி சங்ஙார ன** எனும் ஒரு மொழி கீதையால் மூபதி விளங்ங வரும் முத்தாக வந்து அருள்கிறார்கள்.

சன்மார்க்க மரபாக வள்ளல் பெருமான் அருளிய
**சாகாத்தலை** = ருத்ரபாகம் = நெருப்பு
**வேகாக்கால்** = மகேஸ்வரபாகம் = காற்று
**போகாப்புனல்** = சதாசிவபாகம் = ஆகாயம்



Copyright © AMNA Trust, Chennai 

எனும் தத்துவமாக உள்ளது. இது மனிதனிடத்தில், ஆவி- ஆத்மா - சரீரம், உடல் - உயிர் - ஆன்மா, அலீபு-லாம்-மீம், அடி-முடி-நடுவாக உள்ளது.

சிவன் என்னும் வாடாத தீபமான ஜீவன் ஆதியாக, ஜோதியாக, சுயம்பிரகாசமாக, பிரம்ம சொரூபமாக எல்லாவற்றுள்ளும் ஊடுருவி னிற்கிறது. அதுவே ரூஹு என்பதாகவும் ரூஹானி எனும் சத்தி வடிவாகவும் உள்ளது. வேத முடியை விளக்கும் அறிவுத் திருமேனியும், அதற்கு இசைந்து கேட்க காதாகிய அறிவும் வேண்டும். அறிவிருக்கும் தலமே இறைவன் இருக்கும் தலமாகும். குருபாதம் மறவாத திருவருளால் ஒரு மொழியாம் குருமொழி மெய்ப்பால் அறிந்தால் சர்வ வேதமாமறைகளின் வட்டப் பூட்டின் கெட்டித்தாளை எட்டித் திறக்க வல்ல சாலைத்தமிழ் கைவரவாகும் என அருளி, தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

**12-03-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்**

**வாவிண் மேக குடைச் சைவ மேனியர்...** என்ற தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது

**குருபிரான் அருளமுதம்:** மண், நீர், நெருப்பு எனும் சிவலிங்க தத்துவமாகிய மூன்றும் னிருபணை ஆகுமிடம் அவரவர் சிரசாக உள்ளது. னீதியெனும் பொருள் ஆனவர்களே மனு என்பது பெரியோர்கள் வாக்கு. னான் எனும் உணர்வு எல்லா ஜீவபேதங்களிடம் இருந்தாலும், அதனை அறியும் அறிவுமாணிக்கம் மனிதனிடத்தில் தான் உள்ளது. தான் யார் என அறிய விழைபவன் மனு, அறிந்தவன் தேவன், அறியாமல் இருப்பவன் நரன் என்கிறது வேதம்.

*ஜீவசகோதரி அஞ்ஞனா:* மனதின் சொல் கேளாமல் அறிவின் சொல் கேட்டு அறிவின் போக்கில் செல்ல வேண்டும். **தீதும் நன்றும் பிறர் தர வாரா...** என்பதற்கேற்ப நன்மையும், தீமையும் நம் செயலாலேயே வருகிறது. **நித்திய கண்டம் பூரண ஆயுசு** என்பது னித்தியமான அறிவை குருபிரான் மூலம் பெற்று னித்தியத்தைக் கண்டு அம்மயம் ஆகி பூரண ஆயுசைப் பெறுவதாகும்.

**குருபிரான் அருளமுதம்:** நித்திய கண்டம் பூரண ஆயுசு என்பது மங்களகரமான வார்த்தையாகும். அவரவர் எண்ணமே மங்களமாகவும், அமங்களமாகவும் உள்ளது.

*ஜீவசகோதரர் ஜெகன்:* **சால்மோனின் ஞானம்:** னீதியின் மேல் அன்பு செலுத்தி நேர்மையான உள்ளத்துடன் அவரைத் தேடுங்கள். னீதி என்பது ஜீவனாக, இறப்பற்றதாக, அதனைத் தேடுபவர்களுக்கு அதுவே தன்னை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது. னீதியை விட்டு அகலும் மனு கலியாகிய எமனிடம் சிக்குகிறான். வஞ்சனை எனும் பாவம் நிறைந்த ஆன்மாவில் ஞானம் நுழைவதில்லை. நற்பெயர்ச்சி பெற்ற உள்ளம் வஞ்சனையிலிருந்து விலகி ஓடும். நீதியாகிய பரிசுத்த ஆவியை உணர்வதே அறிவு. சாவை கடவுள் உண்டாக்கவில்லை எனவே னித்திய ஜீவனை கைக்கொண்டு சாவிலிருந்து தப்புவதே மனுவின் கடமையாக இருக்கிறது.

*ஜீவசகோரர் சுந்தரவடிவேல்:* சுத்த துறை இருதயத்தில் வெளியாகும் இறைவனை ஆசானின் அருளால் தான் அறியமுடியும். போலி குருமார்களின் செயல்கள் யாவும் அழிவை நோக்கியே அழைத்து செல்லும். மெய்க் குருபிரானின் செயலே அழியாமையைத் தரும்.

*ஜீவசகோதரர் முருகேசன்:* சந்திரன் அறிவு நிலையாகவும், சூரியன் ராசி நிலையாகவும் உள்ளது. இரண்டும் கடந்த நிலையே இறை நிலை. அறிவின் துணையுடன் இறை நிலையை தன்னில் அறிவதே தன்னையறியும் செயல்.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் கருப்பசாமி:* திருவை தொட்டுக் காட்டி மண்ணுலகில் இருந்து விண்ணுலகிற்கு ஏற்றி வைக்கும் சற்குருவே திருவள்ளுவராக இருக்கிறார். ஓரிதழ் தாமரையான ஆசானின் னா ஆட்டமே இவ்வுலகை அறிய வைக்கும் உலகாக உள்ளது.
*ஜீவசகோதரர் பாண்டி:* நமசிவாய எனும் ஐந்தெழுத்து மந்திரம், பஞ்சபூதங்களாகிய நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயத்தை குறிப்பதாக உள்ளது. ஆசானின் மணிதிரண்ட னாத அழைப்பை பெற்றவர்களுக்கே ஞானம் கை வரவாகும்.

*ஜீவசகோதரர் முனியாண்டி:* னீதி எனும் அறிவாகிய பொருளை தோற்றத்திற்கு கொண்டு வரும் குரு முகத்தில் பிறப்பதே மறுபிறப்பு. நரனுள் மாண்டு கிடக்கும் மனுவை எழுப்பும் ஆசானே அறிவின் ரூபம்.

*ஜீவசகோதரர் ஆனமலையான்:* மெய் வணக்கத்திற்கான சிறந்த வழிகாட்டி ஆசானின் திருவார்த்தையே ஆகும்.

*ஜீவசகோதரர் பாலசுப்ரமணியம்:* ஞானம் பெற்றவர்கள் இவ்வுலக வாழ்வில் புளியம்பழமும் ஓடும் போலவும், நீரில் இருக்கும் தாமரை இலை போன்றும் வாழப்பழக வேண்டும்.

*ஜீவசகோதரர் பழனி செல்வராஜ்:* குரு இல்லா மனு ஞானம் பெற முடியாது. குருவின் னாதத்தை கேட்க கேட்க மெய் உணர்வு ஓங்கி அறிவுத் தெளிவு பெற்று ஞானத்தை அடைய முடியும்.

*ஜீவசகோதரர் பொன்செல்வம்:*

**குருபெரு மானாய்க் குவலயம் தன்னில்**
**அரும்பதக் காமீ லண்ணலென் ஐயன்...**

என் அறியாமையை அறிய வைத்து உடல் என்பது நான் அல்ல, நான் என்பது ஆன்மா என்பதை அறிய வைக்கிறார்கள். ஐம்புலன்களின் தலைவனாகிய மனதின் துணையோடு நான் சேர்ந்து மூச்சு வீணாகி நாளானது கழிகிறது. அப்படி வீணாகும் நாளை வாழ்நாளாக குருபிரான் தன் னாத தொனியால் மாற்றி வைக்கிறார்கள். ஆசானின் விருப்பு சொர்க்கமாகவும் வெறுப்பு நரகமாகவும் இது ஒன்றே வேதமாகவும் உள்ளது.

*ஜீவசகோதரர் சுகுமார்:* ஆசான் அருளால் தெளிவான அறிவை பெறும் போது அதுவே தன்னையறியும் தகும் அறிவாக உள்ளது. நித்தியத்தையும் அனித்தியத்தையும் தன்னிடம் அறிய வைக்கும் அவையாக ஆதி மார்க்க னீதி அவை உள்ளது.

*ஜீவசகோதரர் சங்கர்:* அறிவை அறியும், அறிவை அறிவிக்கும் பாரவான்கள் இந்நில உலகிற்கு வந்து கொண்டே இருக்கிறார்கள். **அறிவு இருக்கும் தலம் அறியார் ஆவி வீணே போவார்** என்ற பெரியோர்களின் வாக்கின்படி அறிவு இருக்கும் தலத்தை அறிவிக்கும் ஆசானின் திருனோக்கிற்கு இணங்கி னீதிப் பாதையில் நம்பிக்கையுடனும் வைராக்கியத்துடனும் தொடர்ந்து முக்தி எனும் வீடு பேற்றை எல்லோரும் பெற வேண்டும் என்ற பகிர்தலுடனும், தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

## 16-03-2023 ~ வியாழக்கிழமை சபை
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

**குருபிரான் அருளமுதம்:**

**ஆறிரு சமயத்திற்கும் அறிவுரை தெய்வமாகி...** என்ற தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. மெய்வழியெனும் உள்ளமை இரகசியத்தை அறிந்த மக்களின் தலையுக ஆண்டே


Copyright © AMNA Trust, Chennai

பங்குனி மாதம். ஆதிமார்க்க னீதி அவை மக்களின் ஏக்கம் தவிர்க்க ஐவழி விளைவின் அப்பாலாகிய மெய்வழியின் ரகசியம் துந்துமியின் நாதம் போல் முழங்குகிறது.

**வான்மதி கொரல் வாக்கியம் எண் 104:** அகில உலகிற்கும் எமன் அணுகாத பரிசுத்தம் அளக்கும் தவவல்லபம், சதாகாலமும் ஆண்டவர்களிடமும் திமுதிமுத்து நிற்பதாக அருளியுள்ளார்கள்.

**குருபிரான் அருளமுதம்:** மனம் மயங்காதிருக்க, அதற்கான தவம் பற்றி மெய்வழி ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். ஆசான் அருளால் அறிவறியாவிடில் வேதம் வெறும் கடிதமே. என்னகம் உன் திருப்பாதம் இலங்கும் பொதி மலையில் இருத்தி எனைத் திருத்தி தவ நிறுத்திய சற்குருவாய் என ஆண்டவர்கள் அருளிய படி, ஆதிமார்க்க னீதி அவையின் மக்கள் இம் மெய்ஞான நிலைகள் யாவும் பெற்று, கலங்கரை விளக்காக, கைகாட்டி மரமாக விளங்குவது திண்ணம்.

*ஜீவசகோதரர் வெங்கடேச முத்து:*

**அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்**
**பிறவாழி நீத்தல் அரிது (திருக்குறள்)**

ஆசானின் தணலில் உதித்த அந்தணனே திருத்தாள் அறிவர். பிரம்மத்தை அறிந்து அதன் மீது சவாரி செய்பவனே பிராமணன். மூன்று முடியாக, ஒன்பது பிரி நூலுடன் உள்ள உபநயனப் பூணூல், மும்மூர்த்தியாக, நவக்கிரக பிடியிலிருந்து நம்மை காப்பதாக ஐதீகம். ஆசானின் நாத தொனியை, சுடாத தீயே, புகையாத கனலே என வள்ளலாரும் எமன் எல்லையில் காக்கும் பூப்போன்ற தீயான விபூதியாக சாலை ஆண்டவர்களும் அருள்கிறார்கள். ஆசானின் நாத அருளால் அறம் செய்து நாம் பிறவா நிலை பெறலாம்.

**குருபிரான் அருளமுதம்:** ஓர் பெரியோர் இருக்கும் காலத்தில் அவர்களின் அருளால் பிறவா நிலை பெறுவது எளிதாகும்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **அழகுஅணி சித்தர் பாடல் எண் 7 : கொல்லன் உலை போல கொதிக்குதடி என் வயிறு...** கண் காது மூலம் கோளாறான மனமாகிய வயிறை ஆசான் தன் வாக்கெனும் தீயால் சுட்டு அறிவுப்புடம் போடுகிறார்கள். மனம் செம்மையானால் மந்திரம் செம்மையாமே என ஆக்குவது ஆசானின் நாதம்.

**குருபிரான் அருளமுதம்:** பசி வந்தால் பத்தும் பறக்கும். சகல நோய்களுக்கும் காரணமான வயிற்றுக் கோளாறு போல், மனமாகிய வயிறும், கண்டவற்றாலும் கேட்டவற்றாலும் கோளாறாகிறது. அதை செம்மை செய்வது ஆசானின் நாத மருந்தே.

*ஜீவசகோதரர் சிரஞ்சீவி:* **உரைமனம் கடந்த ஒருபெரு வெளிமேல் அரசுசெய் தோங்கும் அருட்பெருஞ் ஜோதி (வள்ளலார்)** மாற்று இல்லாத உயிருக்கான உரையே அருட்பெருஞ்ஜோதி. கர்ண பரம்பரையாக வரும் பெரியோர்களின் அருளே, உரை மனம் கடந்த ஒரு பெருவெளி. ஐந்து ஆகாச, கோசங்களும், அகத்தில் ஆன்மாவாக, நினைவாக உள்ளதை ஆசானின் நாதவெளியால் அறிந்து பிறவாமை பெறலாம். வள்ளலார் அருளிய தகர மெய்ஞானம் பற்றிய விளக்கங்கள் பல முறை தனது குரு கொண்டலால் அருளப் பெற்றதாக குருபிரான் அருளினார்கள்.

**குருபிரான் அருளமுதம்: அலிபு-லாம்-மீம்:** புள்ளியதே கூர், ஆதியே துணை, சைவப் பொருள், சின்மயப் பொருள் என்பதனை ஆதிமான்மியத்தில் முப்பொருள் கோல விளக்கமாகவும், உஜூது நடை, கேசரி பற்றி தௌஹீது மக்காம் பாடலிலும் அருளப் பெற்றுள்ளது. அறிவறியும்



Copyright © AMNA Trust, Chennai April 2023

போதே பிராண ரகசியம் விளங்கும். தேக முடியாக விளங்கும் அறிவை அறிவிப்பவரே நடுவனாகிய ஆசான்.

**உடல்- உயிர்- ஆத்மா:** உடல் என்பது இறவாமையும், பிறவாமையும் மாயா சரீரமாகிய தூலம் உள்ளபோது தான். உயிர் என்பது நம் உயிரோட்டம் இன்னதென அறிவிப்பது. ஆத்மா என்பது இன்பம், துன்பம் அனுபவிக்கும் ஆனந்த உடலாக, நாமத்திற்குரிய பொருளாக இருப்பது.

**ஆலம்-ரூஹு-ரூஹானி:** ஆலம் எனும் உலக உற்பனத்தின் காரணம் காற்றும் நெருப்புமே. ரூஹு ஜீவனாக, ரூஹானி-ஜீவதேகமாக உள்ளது. மனிதனை இயக்கும் சாப்ட்வேர் என்பதே கவனம். வேகாதகால் மகேஸ்வர தத்துவமான சக்தியாகவும், சாகாத்தலை சிவமாகவும் உள்ளது.

**அகரம்-உகரம்-மகரம்:** விந்து நாதத்தின் ரகசியமே ஜீவனாகிய அகரம். அகரத்திலுள்ள உயிர்ப் பொருளே உகரம். அகர உகரத்தை இயக்கும் இறை நிலையே மகாரம்.

**பதி-பசு-பாசம்:** பாசத்தினால் விளைந்த உடலாகிய பசு, பதியாகிய இறைவனிடம் சேர்வதே பிறவா நெறி.

**சூக்கும -காரண-மகாகாரண** நிலையை மனதின் துணையுடன் அடைபவனே **நான்**.

**பிரம்மா-விஷ்ணு-சிவன்** பிண்ட உற்பத்தி ரகசியமாக அந்தகரண நிலைக்கேற்ப உண்டாகும் தேகமாக இம்மூன்றும் உள்ளது. நிக்கிரக அனுக்கிரகத்தை செய்யக்கூடிய சிவனே குருவாக வருபவர்.

**அடி-முடி-நடு**வாக உள்ள லிங்க தத்துவமே, ஜீவன் சிவலிங்கம் என்பதாகும்.

**மாயை-கவன உலாத் தூண்டில்-தகசல் முடி:** உடல் மாய்கை, உயிர் கவன உலாத் தூண்டில், பரமாத்மா எனும் ஆன்மா தகசல் முடி.

**கால்-நூல்-பிரம்மமுடி:** அறுந்து போகும் அட்சரத்தினால் பிறவிப் பிணியில் இருப்பவனை பிரம்ம முடியின் மூலம் பிறவா நெறியில் ஆக்கி வைப்பது. அலீபு-லாம்-மீம் என்பதை அனுபவத்தின் மூலம் அறியவைத்து மக்களை அக்கரையில் சேர்க்கும் ஓடமே ஆதி மார்க்க னீதி அவை என குருபிரான் அருளியதைத் தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

**18-03-2023 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**உபனிடதத் தெளிந்த வொளி மலையின் பாதம்...** என்ற ஆனந்தக் களிப்பு பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**எமபடரடிபடு கோடாயிதக் கூர் - திருவாக்கியம் எண் : 122 செத்தார் எழுவார் என்று கைத்தாளம் போடுங்கடி...** என்ற வள்ளல்பிரான் வாக்கின்படி, இறப்பை னோக்கிய பயணத்திலிருந்து நம்மை மீட்டு சாகாக்கலை பயிற்றுவித்து இறவாமை அளிப்பவரே அருட்குரு. பாசடை மனத்தால் பவக்கடலில் தவிக்கும் மாந்தரை கரை சேர்க்க பரு மரக்கலனாக வரும் மாதவரின் மாமருந்தாகிய னாதத்தை உட்கொண்டவனே உயிர்த்தெழுந்தவன் என வேதம் அருளுகிறது.



Copyright © AMNA Trust, Chennai April 2023

*ஜீவசகோதரி லாவண்யா :* **அருட்னோடை பாலைவனம் கானகத்தில் அகப்பட்டு அடிமைபரந் நோடிப் பரிதவிக்கும் போது... (ஞான அகவல்)** சிவமுளை காணாத உள்ளமே அருட்னோடை பாலைவனம். யுக யுகங்களாக அனேக பிறப்பெடுத்து களைப்புடன் வருபவர்களை இளைப்பாற்றி, மரகத மண்டபத்தின் னடுவிலிருக்கும் நிழலாடும் பீடத்திலேற்றி, அறுசுவை கொண்டொளித்த இடத்தை அறிவித்து அமரர் ஆக்கும் வல்லபமுடையவரே சிவகுருவரதர்.

**களையா றிடுங்ஙளையா - தலைவருரை**
**களையா றிடுங்ஙளையா**
**சகுனா தியம் வழியும் வெகுகாலமாய் னடந்து**
**மிகுகளை யுடன்வந்த**
**யுகனெடும் புலவோரே...** என்ற தெய்வத் தேடு கூடகம் பாடலின் படி, ஆசானின் அருள் வர்ஷிப்பாகிய சிவமழையில் நனைந்தவர்களின் களைப்பானது இளநீர் அருந்தியது போன்று அகன்றுவிடுகிறது.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **பரிசுத்த வேதாகமம் - தேகமே ஆலயம்.**
கொரிந்தியர் 1 : 3 : 17 **ஒருவன் தேவனுடைய ஆலயத்தை கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார்** ஆன்மா லயப்படும் இடமே ஆலயம். யாரும் கட்ட முடியாத திருமாளிகையாக, இறைவனின் இரகசியப் பெட்டகமாக இருக்கும் தேகாலயத்துள் னுழைந்து தேவனைக் கண்டவனே மனு ஈசனாவான். காணாதவன் தன்னறிவில் சாய்ந்து னீசனாகிறான் என்ற செயலையே இத்திருவசனம் உணர்த்துகிறது.

கொரிந்தியர் : 1 : 16 : 19 **உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியிருக்கின்ற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாய் இருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்ல என்றும் அறிவீர்களாக** குருதேவனின் இரக்கத்தால் அழியா சரீரத்தை பெற்று, பரிசுத்த ஆவி தங்கியிருக்கும் ஸ்தானமாகிய அறிவிருக்கும் தலத்தை அறிந்தவர்களே தன்னையறிந்த தவசீலர்கள். **தன்னையறிந்நது உன்னையையா தன்னையறிவதே தலைவனை அறிவதாகும்** என்ற அத்வைத செயலையே இத்திருவசனத்தில் நீங்கள் உங்களுடையவர்களல்ல என கூறப்பெற்றுள்ளது.

*ஜீவசகோதரர் கோபிநாத் :* **ஸ்ரீமத் பகவத்கீதை - சாங்ஙிய யோகம் - சர்வம் கிருஷ்ணார்ப்பணம்.** அர்ஜுனர் தன் கையிலிருந்த காண்டீபத்தை எமபயத்தால் நழுவ விட்டு, அபய அஸ்த வரத முத்திரைகளுடைய கிருஷ்ண பரமாத்மாவிடம் சரணாகதி அடைந்த சம்பவம், இன்றளவும் குரு சீடனுக்கு இடையில் நிஜ ரூப தரிசனையாக நிகழ்ந்து கொண்டிருக்கிறது. **குலசேகர ஆழ்வார்: தரு துயரம் தடாயேல் உன் சரணல்லால் சரணில்லை...** தன்னறிவில் சாயாமல் ஆசான் அருளிய பிரம்மவித்தை செயலில் வைராக்கிய சித்தத்துடன் சாதிப்பவர்களே தன்னுள் சரணாகதியை உணர்ந்து சாங்ஙிய யோகத்தில் நிலைத்து நிற்பர்.

**குருபிரான் அருளமுதம்: அமுதகலைக்ஞான போதம் இரண்டாம் காண்டம் :**
**தானான வித்தில்லா வித்துங் ஙண்டோம்...** அமானிதத்தின் எழுவகைப் பொருள்களான **கலை, காலம், வித்தை, நியதி, புருடன், மாயை, ராகம்** மனிதனிடத்தில் படைக்கப் பெற்ற காரண காரியத்தின் இரகசியத்தையே ஞானிகள் கற்பகத்தரு, காமதேனு என்ற பரிபாஷை சொற்களைக் கொண்டு வேதத்தில் அருளியுள்ளார்கள். தளிர், இலை, பூ, காய், பழமும் குலுங்குகின்ற அத்தெய்வீக மரத்தில் வாழும் பஞ்ஞபட்சிகளின் இரகசியங்கள் யாவும் குருமுகமாக அறிந்து அடைய வேண்டிய அரும்பெரும் நிலைகளாகும்.

*குரு ஆதியும் அனாதியு மாவர். குரு மேலான தெய்வமாவார். குருமந்நிரத்துக்குச் சமானமானதில்லை. (ஆதலால்) அந்த ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.*
**~ குரு கீதை**



Copyright © AMNA Trust, Chennai

**வினா:** தேவரும் மூவரும் அறியாத திருவடியை அறிய வைத்து அண்டாண்ட விஸ்வரூபத்தை கண்டு களிப்புறும் சகோதாரர்களுக்கு இடையில் சிலர் மட்டும் அறியாது போவதென்ன அருள்செய்வீரே.
**விடை :** புண்ணிய உருவாகிய ஆசான் இரக்கத்தால் பெற்ற பெரும்பலனை உணராது அகந்தை கொண்டு தன்னறிவில் சாய்ந்து, முன்செய்த புண்ணியத்தால் அறிந்தோம் என எண்ணுகின்ற நன்றி கெட்டவர்களுக்கு அரிய விஸ்வலாசம் இல்லையாமே.

*ஜீவசகோதரர் சங்கர் :* அலிபு - லாம் - மீம் என்னும் முப்பொருள்க் கோல மெய்ம்மை விளக்கம் - உடல், உயிர், ஆன்மாவாகிய முப்பொருளும் ஒன்றே.

**சொல்மூன்று அட்சரமொ ரேஅட்சர மைம்பத்தொன்**
**றெல்லாப்பா ஷைகளிலு மிலங்குமே காட்சரமாய்**
**சொல்லும்மீ மென்றதிலே சூட்சம்சு பஹானி** (**தௌஹீது காமீல்)**

ஃ எனும் பிரம்மத்து அருளொளிப் பெருக்கால் சர்வ படைப்புகளும் உண்டாயிற்று. படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலுக்கும் கர்த்தாவாகிய பிரம்மா, விஷ்ணு, சிவன் நம்மிடத்தில் ஜீவசக்தியாய் இருக்கிறது என சிவானந்த பரமஹம்சர் அருளியுள்ளார். தரைதனில் நரனாய்த் தோன்றிய நம்மை மனிதனாக படைக்கும் பிரம்மாவாகவும், கீழ் நோக்கி பாயும் எண்ணத்திலிருந்து காக்கும் விஷ்ணுவாகவும், அறியாமையை அழித்து மேல் நோக்கத்தில் ஏற்றி வைக்கும் சிவனாகவும் விளங்குபவர் குருவே. அகர வடிவினராக வந்து, ஓர் வகை - மூவகை - ஐவகை - எண்வகை பொறுப்பும் உள்ளத்துள் உரிமையுறச் செய்து, ஏழு நிலைகளையும் கடந்த எட்டாவது நிலையிருக்கும் இறைபொருளுடன் இரண்டறக் கலந்து இன்புற நம்மை வாழ வைக்கும் குருவே வேதமுடி, என்ற பகிர்தலுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவுற்றது.

**19-03-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி**

*ஜீவசகோதரர் கௌதம்:* மனிதனின் அனித்திய ஆக்கை குடிலினுள் வீற்றிருக்கும் அழியாத னித்திய தேகத்தையே சொந்த தேகம், புகழுடம்பு, அறிவிருக்கும் தலம், சூக்கும உடல், கைலாசம், வைகுண்டம் என வேதம் கூறுகிறது. செத்திடம், பிறப்பிடம், இனிச் சாகாதிருக்கும் இடத்தை தன்னில் அறிந்து அடைந்தவர்களே புகழுடம்பில் குடியேறி பிறவானெறி பெற்றவர்கள் என்றும், மற்றவர்கள் சீர் எனும் அமானிதம் அறியாது சீரழிவதை,

**செத்தவிடம் பெற்றவிடம் தன்னிலறியார்**
**சீரழிந்து போவாரென் றூதிடுஞ்ஞங்ஙே** என சாலை ஆண்டவர்களும்,

**செத்திடமும் பிறந்திடமு மினிச்சாவா திருந்திடமும்**
**அத்தனையு மறியாதார் அறியுமறி வெவ்வறிவோ** என மாணிக்க வாசகர் பிரானும் அருளியுள்ளார்கள்.

மனிதன் இறைவனின் ரகசிய பெட்டகம். நாம் ஏன் பிறந்தோம் முடிவில் நம் கதி என்ன என்பதை ஆய்ந்து தேடாமல் அறியாமை எனும் இருளில் மூழ்கி இருப்பவர்களை மீட்டு, அறிவுக்கண் திறப்பித்து தன்னையறியும் கடமையை வேதத்தின் வாயிலாக உலக மக்களுக்கு உணர்த்துபவர்களே மெய்ஞான மகத்துக்கள்.

**ஆண்டவன் இன்ஸானின் கல்பகத்தில் வெளியாவதன்றி, வேறு எங்கும் வெளியாவதில்லை. மூமீனுடைய கல்பு இறைவனுடைய அர்ஷ்பீடம். இன்ஸான் இறைவனின் ரகசியப் பெட்டகம் (திருக்குர்ஆன்)**



Copyright © AMNA Trust, Chennai 

திருவள்ளுவர் அருளிய எண் எனும் எட்டாகிய அகரத்தையும், எழுத்து எனும் பிள்ளையார் சுழியாகிய ஏகாட்சரத்தையும் மூன்றாவது கண் மூலம் தன்னுள் உணர்ந்தவர்களே உயிர் வாழ்பவர்கள் என்ற உள்ளமை இரகசியத்தை உணர்த்துவதே **திருக்கொரல்**. **நான்** என்ற பிரம்மம், அந்தகரணங்களுடன் கூடி ஐம்புலன் வழியாக பிரம்மராட்சசனாக வரும்போது கலிமரமாகவும், ஆசானின் னாதமருந்தை உட்கொண்டு, ஐம்புலக் கதவை அடைக்கும் பேரறிவைப் பெற்றதும் ஓரறிவாகிய கலிமா மரமாகவும் விளங்குகிறது என்பதை,

**அஞ்ஞுஞ்ஞும்பிஞ் ஞாகிய தோமுக**
**மருள் படிந்நிட விருள் பொடிந்நிடும்**
**மஞ்ஞுஞ்ஞெங்ஙஞ் ஞாவா மூலிகை**
**மருந்நெனும் கலிமா மர னீயென – அறிவாயே** **(பூரண வண்ணப்பா)**

என னமது குலதெய்வம் பிரம்மோதய சாலை ஆண்டவர்கள் அருளிச் செய்துள்ளார்கள் என்ற பகிர்தலுடன் அவை இனிதே நிறைவேறியது.

### 19-03-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை
### தொகுப்பு: ஸ்ரீமதி. பானுமதி குமரேசன்

*ஜீவசகோதரி சாந்தினி:* **னீதி யெனும் பொருளான மனுக்குலத்தை னித்தியனும் னித்தியத்திற்கே படைத்தான்.** மனிதனுக்கென்றே இறைவன் தனிச் சீதனமாக வழங்கிய பொருளே, ஏழுநிலைகள் கொண்ட அமானிதம். அதுவே னற்றாள், சிவனடி பாதம், ஆதம் பாதம், புதையல், புராதனச் சொத்தாக உள்ளது.

**அமானிதம்:**

1) **கலை** - 64 கலைகளுக்கும் மேம்பட்ட ஓர் கலையாக அறிவாக விளங்குவது.
2) **காலம்** - இறந்த காலம் - சஞ்ஞிதம், நிகழ்காலம் - பிராரப்தம், எதிர்காலம் - ஆகாமியம்.
3) **னியதி** - ஐம்புல நுகர்வும் குறிப்பிட்ட னியதிக்கு உட்பட்டே உள்ளது.
4) **வித்தை** - ஞானம் எனும் அறிவைப் போதிக்கும் பிரம்மவித்தை.
5) **புருடன்** - ஆறுமுகக் கடவுளாகிய முருகப் பெருமானின் அறிவு நிலையாக விளங்குவது.
6) **மாயை** - மாயை என்பது எழுவகை திரைகளாக, ஏழு சக்திகளாக, நபுசுகளாக உள்ளது.
7) **ராகம்** - ஆசானின் அருள் அமுதமே ராகமாக உள்ளது.

மேற்கண்ட அமானிதத்தின் ஏழுநிலைகளும் குருமுகமாக அனுபவத்தால் அறிய வேண்டிய ஒன்றாக உள்ளது.

*ஜீவசகோதரி நாகமணி:* **மெய்** என்பது நித்தியமான ஒன்றாகவும், பொய் என்பது அனித்தியமான பல கோடியாகவும் உள்ளது. அறிவுக்கண் கொண்டு பார்ப்பது மெய்யாகவும், மனக்கண் கொண்டு பார்ப்பது பொய்யாகவும் உள்ளது. குருவின் வாக்காகிய பொருளை நாம் பெற்று உடல், பொருள், ஆவி தத்தம் செய்தே மெய்யை அறிய முடியும். ஒரு மெய்க் குருபிரான் மனம் உவந்து நம்மை சீடனாக ஏற்றுக் கொள்வது சரியையாகவும், குருபிரான் அருளிய அகமிய செயலைப் பழகுவது கிரியையாகவும், பெரியோர்கள் அருளிய செயலில் னிலைத்திருப்பது யோகமாகவும், இம்மூன்றும் கைவரப்பெற்று வரம்பற்ற பேரறிவைப் பெறுவது ஞானமாகவும் உள்ளது.

*ஜீவசகோதரி பூர்ணிமா:* ஆசான் அருளால் மனிதப்பிறவி எடுத்து மண்ணுலக வாழ்வில் இருந்து கொண்டே விண்ணுலக வாழ்வில் குடியேறும் செயலே பிரம்மவித்தை. குருவருளால் மூன்றாவது கண் திறக்கப்பெற்று, காலின்றி நடக்கவும், கண்ணின்றி பார்க்கவும், சிறகின்றி பறக்கவும், ஜோதியுள்ள இடமறிந்து அஞ்ஞான இருளகற்றி அறிவு உருவாய் அருட்பெருஞ்ஜோதியாய் ஆகலாம். காலன் அணுகமுடியாத இடமே ஐவழி விளைவுக்கு



Copyright © AMNA Trust, Chennai 

அப்பாலாகிய அழியாப்பதி எனும் ஞான ஆகாயப் பெருவெளி. அழிவற்ற அன்னாட்டிற்கு சென்று வரும் வழியே மெய்வழி. குருபெருமானின் ஆல வாயூற்று அமுதம் பருக நம் அனீதங்கள் யாவும் னீதமாக மாறுகின்றன.

*ஜீவசகோதரி இன்பலதா:* செவிச்செல்வமாக, நற்றாளாக, விபூதியாக, ருத்ராட்சமாக, ஜீவப்பிரகாசமாக இருப்பதே ஆலவாயான் திருநீறு. இறைவன் தனது சாயலாகிய மனிதனின் இதயத்தில் குடியேறி இருப்பதை மனிதனுக்கு அறிய வைப்பவர்களே தீர்க்கதரிசியர்கள். பஞ்சபூதங்களில் ஒன்றான ஜலம், வான் மழையாக உலகம் உய்ய உதவுகிறது. கொண்டல் மழையாகிய குருபிரானின் அருளமுதமோ மரணமிலாப் பெருவாழ்வை நமக்கு வழங்கி நம் அகமிய உலகத்தை உய்யச் செய்கிறது. **நான் தாகமாய் இருப்பவனுக்கு ஜீவத்தண்ணீர் அருந்தக் கொடுப்பேன் (சத்திய வேதம்).** ஜீவத் தண்ணீரானது ஆத்ம மர்ம ஜலக்கடலாக, புனற்றுறைக்கோயிலாக, அருள்மாரியாக, ஆகாய கங்கையாக, செவிச் செல்வமாக, இருக்கிறது. ஜீவத்தண்ணீர் அருந்தியவர்களே மூமீன். ஆடை நனையாமல் அங்கம் நனைந்து மூழ்கி நம் பாவம் போக்கும் ஆகாய கங்கையாகிய தீர்த்தமே தேசிகரின் வாசகம்.

*ஜீவசகோதரர் சங்கர் :* அத்வைத நிலை பெற்ற குரு ஆண் ஒருவரே நம் அறியாமையை அகற்ற வல்லவர். நம் எண்ணங்களின் கீழ் நோக்கம் யாவும் மேல் நோக்கமாக மாறுகின்ற செயலே அமானிதம். அறிவை அறியும் நிலையே விழிப்பு நிலை. பொய் தீர விசாரித்து அறிவதே மெய். நீக்கமற எங்கும் நிறைந்த அழியாப் பதியில் குடியேறிய நாயகமாகிய குருவின் அருளால் ஆறாவது அறிவறிந்து பிறவாமை பெறுவதே மனுவின் கடமை என்ற பகிர்தலைத் தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

## 23-03-2023 ~ வியாழக்கிழமை சபை
## தொகுப்பு: ஸ்ரீமதி. விஜயசித்ரா

**அங்கமதிடத்தில் ஐம்புலக்கதவை அடைக்கும் பேரறிவு...** என்ற குருமணி மாலை பாடலுடன் அவை மலர்ந்தது. உலகத்தில் தன்னை அறியும் அறிவே பேரறிவு. ஆறாவது அறிவின் துணை கொண்டு ஐம்புலக் கதவை அடைக்கும் பேரறிவை, பெரும் கருணைக் கடலாய் வரும் குருபிரான் மூலமாக அறிந்து அதனை நம்மிடம் செயலாக்கிக் கொள்வதே நமக்கு மேன்மையைத் தரும்.

**வான்மதிக்கொரல் வாக்கியம் எண் 105:** ஒரு பெண் குழந்தையை எடுத்து வளர்த்து ஆணாக்க முடியாதது போல் உலகிலுள்ள பொய் வழிபாடுகள் என்றும் மெய்யாகாது. இறைவனை அடைவதற்கான வழியில் நாம் படும் பாடாகிய வழிபாடு அகங்காரம் எனும் ஆணவமாக, பாவமாக, தீட்டாக, கசப்பாக, கோரமாக, சீரற்ற அறியாமையின் வெளிப்பாடாக இருக்கிறது. அக்கோர முகத்தினை மாற்றி உடல் இருக்கும் போதே மேலான பலனைப் பெற வைப்பவர்களே மெய்க் குருபிரான்.

*ஜீவசகோதரி லாவண்யா:* **வாழ்வனைத்தும் தந்தெனது... (ஞான அகவல்)** கதி மோட்சம் காணும் வண்ணம் முன்னேழு பின்னேழு தலைமுறைகளை வளர்வித்து, அன்பே சிவம் என்ற சைவ நெறியான அறிவு நிலையில் நின்று, கோள்களால் ஆட்சி செய்யும் பவக்காடான இவ்வுடம்பு பொய் என்பதை நாத அக்கினியால் அறியவைத்த தன் குருவின் தாள் பணிந்து ஆண்டவர்கள் போற்றுகிறார்கள். அப்படிப்பட்ட மெய்யான தவவாழ்வை எனக்கும் உரித்தாக்கி வைத்த அபுசாலிகெனும் ஜீவனுக்கான தவம் கொண்டு எழுந்த குருவின் தாள் பணிகின்றேன்.

*ஜீவசகோதரர் சங்கர்:* எம பயத்தைக் கடந்ததுவே வாழ்வாகும். எல்லோரும் வந்த ஓர் குலமே சுக்குலம். அப்படியான வாழ்வு தந்து குலத்தை ஆண்டு, அழியாத வளர்வித்தை ஊன்றி, தரும துரையாக, வாரிக்கொடுக்கும் வள்ளலாக இருப்பவரே குருபெருமான். நற்றாளாகிய சிவத்துடன் இரண்டறக் கலப்பதற்கான குருவின் சொல்லை செயலாக்கும் அடிமையின்


Copyright © AMNA Trust, Chennai

அன்புக்கு அழிவில்லை. நவ கோள்களின் பிடியை விலக்க அக்கினியாக வரும் குருபெருமானின் அருளால், அறிவின் வழிமுறையில் னின்று செய்யும் மெய்த்தவமே அபுசாலிகெனும் தவம்.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:*

**கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை** **(திருக்குறள்)**

நற்றாளின் சிறப்பைத் தெரிந்தே கற்றதன் பயனைப் பெறமுடியும். வினைக்கு முதல்வனாகிய மனமெனும் பிரம்ம தத்துவத்தின் ரகசியத்தை உணர்ந்து அதன் படைப்பை நிறுத்தக்கூடிய செயல்தான் பிரம்மவித்தை. தசாபுத்தியின் மூலமாக அழி அவா கொண்ட மனமானது கோள்களின் பிடியில் சிக்காமல், கோளரி வாளராகிய எண்குணத்தான் அருளால் நற்றாளை உணர்ந்து, மெய்உணர்வு பெற்று, நிர்க்குணன் ஆகிப் பிறவாமை பெறும் வழியை திருவள்ளுவர் அருளியுள்ளார்.

*ஜீவசகோதரர் சங்கர்:* எண்குணத்தான் ஆகிய இறைவனை கோள்களில் சிக்குண்ட மனம் கொண்டு வணங்கும் தலை வணங்காத் தலையே. அகரப் பொருளெனும் ஜீவனே குணமற்ற பெருங்குணப் பணப்பு. இரவு பகல் ஓயாமல் நம்மை காத்துக் கொண்டிருக்கும் அவ்விறை பொருளை அறியவைத்து அனுக்கிரகம் செய்பவர்களே சொற்குணா உற்பனராக வரும் மெய்க்குருபிரான்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:*

**ஊற்றைச் சடலமடி உப்பிருந்த பாண்டமடி**
**மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுதில்லை...** **(அழகுஅணி சித்தர்)**

ஒன்பது வகை தாது உப்புகளாலான அழி உடலாகிய இந்த உப்புப்பாண்ட உடலுக்குள் நின்று விளங்குகின்ற அணுவாண்ட பிரம்மாண்ட அணுவரசு அழியா வஸ்து அணுவதனை, குருபிரானின் நாத மருந்தை உண்டு, மாற்றிப் பிறக்கும் வகை தெரிந்து, வினை தீர்ந்து, மரணவறுமை ஒழிந்து, கண்ணம்மா என்னும் தாயின் பாதத்தைச் சேர்ந்து கொள்ள வேண்டும்.

*ஜீவசகோதரர் சங்கர்:* உப்பாலான உடலையே நான் என னினைத்திருந்த தன்னை, நாதமருந்தை அருளி அறிவின் இலட்சணத்தை உணர்ந்த மனுவாக்கி, மாற்றி பிறக்க வைத்ததால் அக்கடமாகிய அழியா தேகத்துள்ளாகி ஊற்றைச் சடலத்தை விட்டு திருவடியில் சார்ந்ததை அழகுஅணி சித்தர் அருளியுள்ளார்.

*ஜீவசகோதரர் சிரஞ்சீவி:*

**ஊக்கமு முணர்ச்சியும் ஒளி தருமாக்கையும்**
**ஆக்கமுமருளிய அருட்பெருஞ்ஜோதி** **(அருட்பெருஞ்ஜோதி அகவல்)**

ஊக்கம் என்ற மன எழுச்சியோடு ஒரு செயலைச் செய்து அதில் மேன்மையைக் காண்பதும், அனுபவிப்பதும், கர்த்தாவாகிய புலன்களின் உள்ளிருந்து செயல்படும் **நான்** எனும் பிரகாசப்பொருளாக இருக்கிறது. மனமானது பஞ்சமூர்த்திகளின் துணையுடன் ஆக்கவும், அழிக்கவும் இருப்பதை ஆக்கத்திற்குரிய ஒன்றாக ஆக்கி னித்திய தேகத்தில் மெய்யுணர்வு ஓங்கப் புகுத்தாட்டி வைத்து ஜீவகாருண்யத்துடன் திருவருளை வழங்குபவர்களே அருட்பெருஞ்ஜோதியாகிய மெய்க்குருபிரான்.

*ஆபத்து னேர்ந்த காலத்துக்குச் சகல தர்ம வடிவமான குரு ஒருவரே மேலான பந்துவாவர். (ஆதலால்) அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் சங்கர்:* **முப்பொருள் கோல விளக்கம்:** தன்னிலை அறியாமல் யாது என்ற அறிவு இல்லாமல் இருக்கும்போது மாய்கையாகவும், அதுவே தன்னைஅறியும் தவமுறையில் மேல் நோக்கமாக இருக்கும் போது கவனஉலாத் தூண்டிலாகவும், அதனுடன் இரண்டறக் கலந்து ஐக்கியமாகும் போது அதுவே தஹசல்முடியாகிய சாகாத்தலையாகவும் விளங்குவதே இந்த முப்பொருளின் ரகசியம் என்ற பகிர்வுகளைத் தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

## 25-03-2023 ~ சனிக்கிழமை சபை
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

**இணங்கிய சுபாவம் பார்த்து**
**என்னிரு தயத்தி னுள்ளே** எனும் தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர் :* யதார்த்த உள்ளமுடன் இணங்கிய சுபாவம் கொண்ட நன்மன மக்களே மெய்வழியான அறிவின் வழி இணங்கி, இருதயத்தை பிரகாசமாகவும், இஸ்லாத்தின் ஆறும், ஐந்துமாகிய னிலையறிந்து வணங்கும் பெருனிலையை அறிகிறார்கள்.

**கோடாயிதக் கூர் திருவாக்கியம் எண்: 123** ஆசானின் திருவாக்கியங்களை நாம் கேட்கும் போது நம் அங்கக்குலங்கள் ஆத்திர அசைவு பிறங்க நிற்பதுவே ஆபத்து வரும் நேரமான காலனிடமிருந்து தப்புவதற்கான ஒரே வழி ஆகும். பொறிகள் ஓடாத இடத்திலிருந்து வெளியாகும் திருவாக்கியங்கள் ஐந்தெழுத்து மந்திரமான இறை இல்லமாக உள்ளது. ஐம்புலக்கதவை அடைக்கும் செயல் ஓரறிவான பேரறிவாக உள்ளது.

*ஜீவசகோதரி லாவண்யா :* **அடிமுடி னடுவு மந்நமு மிலவாய்... (ஞான அகவல்)** வானில் நடுவாக ஒட்டி ஒட்டாமல் இருக்கும் நிலவு போல் மனித உடலிலும் **நான்** எனும் பொருள் நடுவாக ஒட்டி ஒட்டாமல் விளங்குகிறது. அடியும் முடியும் னடுவாகி என்ற மெய்யைக் கண்டு அவ்வானவரே அனந்தர். நாயக னபியான நடுவறிந்து அருளும் குருபிரான் பிறவிப் பெருங்கடலில் பிறப்பொழியாத பாவியென் குறை தவிர்த்து, இருளகற்றும் மொழியால் என் அறியாமை அகற்றி, இவ்வுலக ஆசை மீது வெறுப்பும், அவ்வுலக வாழ்வில் நாட்டமும் கொள்ள வைத்து பேரின்பம் அளிக்கிறார்கள்.

*ஜீவசகோதரர் சங்கர்:* உலகிலுள்ள சகல பொருட்களுக்கும் தோன்றல், நிற்றல், மறைதல் என்ற மூன்று நிலைகள் உள்ளது. இம்மூன்றும் அற்ற இறைவனை அறிய வைப்பது மெய்ஆசானின் வித்தில்லா வித்தான நாதமாகும். ஆதியே நாயகமாக, நபியாக, அறிவுக்கு அறிவான ஆசானாகவும் வருகிறார்கள். பசித்திரு-தனித்திரு-விழித்திரு என்பதானது அறிவில் பசித்தும், அலையும் மனதை விட்டு தனித்தும், தூங்காமல் தூங்கும் விழிப்பு நிலையாகவும் உள்ளது.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **சத்தியவேதம்.**

ஜான் 1:2:25 *நித்திய ஜீவனை அளிப்பேன் என்பது அவர் நமக்கு செய்த வாக்குத்தத்தம்.*
நித்திய ஜீவன் சிரசிலும், அனித்திய ஜீவன் கண்டத்திலும் இருப்பதை அருள்பவரே கர்த்தர். கர்த்தராகிய குருபிரான் ஐவழி விளைவின் அப்பாலாகிய செய்வழி காட்டி உய்வழி கூட்டும் மெய்வழியை அருள, அதை சொந்தமாக்கிக் கொள்பவன் அழியாத கன்மலைமேல் வீட்டைக்கட்டின அறிவுடையவன். அறியாமை எனும் இருள் வீடான அழிந்து போகும் மணல்மேல் வீட்டைக் கட்டினவன் அறிவற்றவன்.



Copyright © AMNA Trust, Chennai

ரோமன் - 29 *உள்ளத்திலே யூதன் ஆனவனே யூதன், எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகுவதே விருத்தசேதனம்; இப்படியானவனுக்குரிய புகழ்ச்சி மனுஷராலே அல்ல, தேவனாலே உண்டாயிருக்கிறது.*

மெய்குருவின் அருளால் இருதயம் இன்னதென அறிந்து, தன்னுள் இருக்கும் பரிசுத்த தலைவனை அறியும் செயலே சுன்னத் எனும் விருத்தசேதனம். மனுத் தோற்றத்தில் வரும் தெய்வீக புருஷர்களின் இரக்கத்தால் பெறும் மறுபிறப்பின் மூலமே ஒருவன் பிராமணன், அனந்தன் எனும் நாமத்திற்கான நிலையைப் பெறமுடியும்.

*ஜீவசகோதரர் சங்கர்:* அனாதியான நித்திய ஜீவன் ஆதியாக தோற்றத்தில் வரும்போது அனித்தியமாகிறது. னித்தியப் பொருளான ஜீவனை அறிவதே தன்னை அறிதலாகும். மெய்ஞ்ஞான பயணத்தில் நம்பிக்கை ஆணிவேர் போன்றது. அதனுடன் வேதசாட்சியாக பெறும் அனுபவமே ஜென்ம சாபல்யம் நல்கும்.

*ஜீவசகோதரர் கோபிநாத்:* **பகவத்கீதை - சாங்கிய யோகம்:**

சரணாகதி அடைந்தவருக்கு பகவானின் உபதேசங்களாவன : நித்தியமான ஆன்மா அழிவற்றது, பிறவாது, இறவாது, தேயாது, வளராது. தேகத்தில் உள்ள ஆன்மா நலிந்த போது வேறு தேகம் எடுக்கிறது. மரணத்திற்குப் பின் ஆன்மா வினைக்கேற்ப வேறு தேகம் எடுப்பதை விளக்குவதே திதி மற்றும் பித்ரு பூஜை சடங்குகள். இவ்வுலகில் இறப்பையும் பிறப்பையும் கண்டு கவலை கொள்வது அறியாமை. ஞானத்தின் முடிந்த முடிவு பிறவாமை என்பதையே மெய்வழி ஆண்டவர்களும் அருள்கிறார்கள்.

ஆத்மா தத்துவ விசாரம், அனுஷ்டானம் மூலம் அறியப் பெறுகிறது. முக்குணம், பற்று, அச்சம், சினம், இவற்றால் மனக்குழப்பம், நினைவு நாசம், புத்தி நாசம் உண்டாகி ஒருவன் அழிகிறான். இவற்றிற்கு காரணமான மனதையே, **மனம் திரும்புங்கள் பரலோக ராஜ்ஜியம் சமீபமாக இருக்கிறது** என்கிறது சத்தியவேதம். புலன்களிலிருந்து பிரிக்கப்பட்ட பொறிகளை உடையவனே அறிவு நிலை பெற்றவன். குருபகவானின் னாதத் தொனியால் பிரம்மவித்தை எனும் பேரறிவு பெற்றே, சாங்கிய யோகத்தின் முடிவு நிலையான பிரம்ம நிர்வாணம் பெற முடியும்.

*ஜீவசகோதரர் சங்கர்:* ஆன்மா அனைவரிடமும் ஒன்றாகவே இருக்கின்றது. நம் உள்ளிருக்கும் ஜீவன் அவாவுடன் தாவி மனமாகி பிறப்புக்கு ஆளாக்குகிறது. குருவின் திருவருள் ஒன்றே பிறவிப் பெருங்கடல் கடப்பதற்கான வழியாகும். சினத்தை ஒழித்து அறத்தில் ஆக்குவதே சொர்க்கத்திற்கான வழி. வானம் என்ற நினைவில் நிர்க்குணம் பெற்றவனே நிர்வாணி என்ற பகிர்வுகளுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை நிகழ்வுகள் இனிதே நிறைவுற்றது.

## 26-03-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை
## தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்


*ஜீவசகோதரி பொன்லக்ஷ்மி:* தொனியை மெய் செயலுக்காக அதிகமாக செலவு செய்பவன் ஜீவன் முத்தன் ஆகிறான். அர்ஜுனனுக்கு உபதேசித்த கீதையை இன்று நமக்கும் அருளி மறுபிறப்பில் ஆக்கி ஜீவதேகத்தில் நுழைந்து பழகுவதற்கான ஆறாவது அறிவை அறிய வைத்து நமக்கு உபதேசிப்பவரே ஆசான். அவரே சிவராஜர்.

*ஜீவசகோதரி அருணா:*

**காலகால காலங் ஙடந்த காரிருள்க் காருண்யக் கறுப்பை** **(ஆதி மான்மியம்)**
சர்வமும் காலத்திற்குள் அடக்கம். காலச்சக்கரம் சுழன்று கொண்டே உள்ளது. உலகில் காணப்படுபவை யாவையுமே காலத்தால் விழுங்கப்படும். காலம், எழுவதும் அழிவதும் இல்லை. மாறும் தன்மை கொண்ட இவ்வுலகம் பிரளயத்தால் அழிந்து, மீண்டும் உருவாகி, ஆகாயத்தில் கரைந்து விடும் என்கிறது யோகவாசிஷ்டம்.



Copyright © AMNA Trust, Chennai



காலச்சக்கரத்தை அழிவற்ற மனிதன் ஒருவனே அறிகிறான். ஆண்டு, மாதம், வாரம், நாள், யுகம் என்பது சந்திர சூரியனைக் கொண்டே கணிக்கப்படுகிறது. தமிழ் ஆண்டு மொத்தம் 60 வருடங்கள் கொண்ட சுழற்சி ஆகும். அறிவின் நாமத்தைக் கொண்டே தமிழ் மாதங்களுக்கு சாலை ஆண்டவர்கள் பெயர் சூட்டியுள்ளார்கள். சத்திய வேதத்தில் ஆதியாகமத்தில் ஏழு நாட்கள் உண்டாக்கப் பெற்ற விதமும், எட்டாம் நாள் ரா பரிசுத்த நாளாக உள்ளதும் கூறப்பெற்றுள்ளது. ஏழு நாட்களும் ஏழு கிரகங்களாக மனிதனின் முகத்தில் வைத்தே படைக்கப் பெற்றுள்ளது. ஒவ்வொரு நாளினுள்ளும் வளர்பிறை, ராசி, நட்சத்திரம், மேல்நோக்கு, கீழ்நோக்கு, ஓரை என உள்ளது. மனிதனுக்கு பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள அவன் காலம் உயிரின் ரகசியமாக உள்ளது. இதனை அறியாத ஜோதிடம் யாவும் கணக்கறியா ஜோதிடமே. மனிதனை பிரகாசிக்க செய்கின்ற மெய்யான ஒளியை அருட்பெருஞ்ஜோதியின் தனிப்பெரும்கருணை கொண்டே அறிய முடியும்.

வள்ளலார், சத்திய பெருவிண்ணப்பத்தில், தந்தையிடமும், தாயின் கருவறையிலும் நாம் இருந்த காலத்தை துல்லியமாக கணக்கிட்டு கூறியுள்ளார்கள். எண்ணம் பலவாறாக விரியும் போது விதியாக சூரியனாகவும், ஒரு மனமாக இருக்கும் போது சந்திரனாகவும் உள்ளது. மோனம் எனும் சுவாசம் ஓடாது நிற்கும் ஏக ராசி குவியல் நிலையை கற்கும் கல்வியே சாகாக்கல்வி. இருள் என்னும் அறியாமை விலக்க வரும் ஞான சூரியனின் உதயத்தை அறிவிப்பதே விடிவெள்ளி.

குருவின் அருளால் மறுபிறப்பு பெற்று, சந்திரன் சூரியன் இல்லாத அவ்விடத்தில் வசிக்க காலத்தை நம் கை வசமாக்கலாம். முழுமையான அறிவே பௌர்ணமி ஆகும். குருவை சரணாகதி அடைந்து, குரு சொன்ன ஆசனம் போட்டு தாரகா மந்திரத்தை ஓத, நாட்கள் வரும் நாளெல்லாம் நலநாளாகும்.

**பார்வையில் பாண்டியன் றன்னைனீ வைத்திடப்**
**பார்க்கும்தொ ழில்வேறு இல்லையடி** **(பொன்னரங்ஙக் கொம்மி)**

என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* குருபெருமானின் அருளால் கோயிலில் உள்ள ரகசியங்கள் நம்மிடத்தில் அகமியமாக இருப்பதை தரிசித்து அறிவு தெளிவு பெற்று இருதயம் விளங்கி மேன்மை அடையலாம்.

*ஜீவசகோதரர் சங்கர்:* நம் எண்ணங்கள் கேடாகாமல் காத்து, இரட்சித்து பிரம்ம பிரகாச ஆறாவது அறிவுத்தெளிவை அறிவிக்கும் ஆசானின் இரக்கத்திற்கு கட்டாயம் பாத்திரமாக வேண்டும். மனிதன் தன்னிடத்தில் சுயம் பிரகாசப் பொருளைக் கண்டு வணங்கவே னீதி னடவு ஆதிமூல நேரம் எடுத்து வைக்கப்பெற்றுள்ளது. ஆசானின் வாய்மை துலக்கமே விஸ்வநாதமாக ஓசை ஒளியாக விடிவெள்ளியாக உள்ளது.



Copyright © AMNA Trust, Chennai 

**30-03-2023 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**வாவிண் மேகக்குடைச் சைவ மேனியர்...** என்ற தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. குருகொண்டல் அவர்களின் வாய்மை, மக்களின் அறியாமையை விலக்கி அறிவைப் புகட்டி செழிக்கச் செய்கிறது. அவ்வாய்மையே பாவங்களை நாசமாக்குகின்றது.

**வான்மதி கொரல் வாக்கியம் எண் 106: இல்லை யில்லைய கிலத்தில் லாதது... சாலைஇ சைவதே** வல்ல வல்லபம் என்பது எமனுடைய அதி வல்லபம். அதனை மிகைக்கும் எதார்த்த தெய்வபீடம் உத்தியோவனக் கானகத்தில் முன் எப்பவும் இல்லாததும், இனி எக்காலத்திலும் இருக்கவும் முடியாததாகவும் வந்துள்ளது. சர்வ சன்னதங்களையும் தாங்கி வந்த மெய்வழி ஆண்டவர்கள், சித்தர் முத்தர்கள் யாவரும் இதற்கு முன்னும் இனி எக்காலத்திலும் சொல்ல முடியாத தேவ ரகசியங்களை தங்களின் வேத வேதாந்தங்களில் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரி லாவண்யா:* **குரு பெருமானாய் குவலயம் தன்னில்.... காட்டி (ஞான அகவல்)** காமில் பதம் பெற்ற குருபெருமான் தங்களின் கேசரி நடை கொண்டு, நமது எண்சாண் உடலுக்கு பிரதானமான சிரசில் வீற்றிருக்கும் ஜீவன் எனும் கலிமாவை நம்மிடம் செயலாக்கி உணரச் செய்கிறார்கள்.

*ஜீவசகோதரர் சங்கர்:* அங்கமதிடத்தில் ஐம்புலக் கதவை அடைக்கும் பேரறிவை அருள்பவர்களே விதி எழுத்தை மாற்றி மதியை அருளும் குருபெருமான். அறியாமை எனும் அனித்திய ஆக்கைக் குடிலில் வாழும் நம்மையும், ஓரறிவாக விளங்கும் காமில் நாயகம், தங்களைப் போன்றே அறிவு பிரகாசத்தில் ஆக்குகிறார்கள்.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:*

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார். (திருக்கொரல்)**

பிறவி என்பது பெருங்கடலாக நீந்திக் கடப்பதற்கு அரிதான ஒன்று என பெரியோர்கள் அருள்கிறார்கள். ஒரு மெய்க் குருபிரானின் துணை கிட்டாதவரை நாம் பிறவியாகிய கடலில் கிடந்து தத்தளிக்கும் ஒரு கட்டைதான். பருமரக் கப்பலாக வரும் மெய்ஆசானின் துணை கிட்டினால்தான் பிறவிப் பெருங்கடலின் சுழலில் இருந்து தப்ப முடியும்.

*ஜீவசகோதரர் சங்கர்:* அடி முடி நடுவும் இல்லாத இறைவனின் திருவடியை சேர்வதற்கான ஒரே வழி சிவனாக, ஜீவனாக, அறிவாக விளங்கும் ஒரு மெய்க் குருபிரானின் திருவடி நிழல் சேர்வதே.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **அழகு அணி சித்தர் பாடல் எண் 9**

**வாழைப் பழந்தின்றால் வாய்நோகு மென்று சொல்லித்**
**தாழைப் பழந்தின்று சாவெனக்கு வந்ததடி... என் கண்ணம்மா.**

முக்கனியில் ஒன்றான வாழைப்பழத்தை தவிர்த்து முட்கள் நிறைந்த தாழைப் பழத்தை உண்டால் கிடைக்கும் தீமையை விட்டு விலகி, சாகாத கல்வியை கற்பிக்கும் குரு பெருமானின் அருள் வர்ஷிப்பை நாடினால் நித்திய பேரின்ப வாழ்வு வாழலாம்.

*ஜீவசகோதரர் சங்கர்:* வாழை என்பது நம்மை வாழவைக்கும் ஆசானின் அருள் அமுதமாகவும், தாழை என்பது நம்மை தாழ வைக்கும் நம் மனமாகவும் உள்ளது. மனதை விட்டு ஆசானின் அறிவு வழியில் சென்றால் மரணமிலாப் பெருவாழ்வு வாழலாம்.



Copyright © AMNA Trust, Chennai 

கால்-னூல்-பிரம்மமுடி: நம் தேகத்தை தாங்கும் கால் என்பதைத் தாங்கும் காரணப் பொருளே காலாகவும், தீக்ஷை என்பது நூல் எனும் வேகாக்காலாக ஜீவனின் போக்குவரத்தாகவும், ஃ எனும் பிரம்மத்து அருளொளிப் பெருக்கே னடு எனும் பிரம்மமுடியாகவும் உள்ளது.

சடாதாரம்-பிராணன்-ஜீவன்: சடத்துக்கு ஆதாரமாகிய போகாப்புனல் என்பதே உடலாக, அலீபாகவும், உயிரான ஆவியே பிராணனாகவும், அதை வீணாக்காமல் காப்பதே பிராணாயாமம் என்பதாகவும், சிற்றம்பல பொருளாக அறிவாக இருப்பதே ஜீவனாகவும் அதைக் கண்டால் ஜென்ம சாபல்யம் எனவும் மெய்வழி ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள், என்ற பகிர்வுகளுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை நிகழ்வுகள் நிறைவுற்றன.

**இசை வகுப்புகள்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**12-03-2023 ~ ஞாயிற்றுக்கிழமை**

**வெங்ஙிங்ஙங்ஙி ஞ்ஞுழி யோச்சிய...** மற்றும் **வித்தைக்குட் தத்திப் பத்தியே...** என்ற பூரண வண்ணப்பா பாடல்கள் தாளத்துடன் பயிற்சி அளிக்கப் பெற்று, அவை நிறைவுற்றது.

**19-03-2023 ~ ஞாயிற்றுக்கிழமை**

**அஞ்ஞுஞ்ஞும் பிஞ்ஞாகிய தோமுகம்...** மற்றும் **மஞ்ஞெஞ்ஞும் மெய்ஞ் ஞானவரோதய...** என்ற பூரண வண்ணப்பா பாடல்கள் தாளத்துடன் பயிற்சி அளிக்கப் பெற்று, அவை நிறைவுற்றது.

**31-03-2023 ~ ஞாயிற்றுக்கிழமை**

**னஞ்ஞுண்டன்னா கத்துரை யேசெலு...** மற்றும் **நெஞ்ஞுஞ்ஞாமல்லெண் ணாயிரம் ஆண்டெனும்...** என்ற பூரண வண்ணப்பா பாடல்கள் தாளத்துடன் பயிற்சி அளிக்கப் பெற்று, அவை நிறைவுற்றது.

குரு வாழ்க ! குருவே துணை !!

*குருவின் னடுவில் விசுவமிருக்கின்றது. விசுவத்தின் னடுவில் குருவிருக்கின்றார். குருவே சகல ஜகத்துமாவர். அவரைத் தவிர வேறில்லை. (ஆதலால்) அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

# 2023 - மார்ச் மாத அவை னிகழ்வுகள்

**05-03-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிறப்பு அவை**

மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயாவின் 15-ம் ஆண்டு பூர்த்தி சிறப்பு சபை, நாயகன் இல்லத்தில் இனிதே நடைபெற்றது.



## ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்

| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **01-05-2023 / தூத்துக்குடி** | ஆதி மார்க்க னீதி அவையின் மே தின சிறப்பு அவை. |



Copyright © AMNA Trust, Chennai 

**2023 மார்ச் மாதம், AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை அளித்தவர்கள்**

| | | |
|---|---|---|
| இன்பலதா | பாஸ்கர் | ராஜூ |
| ஸ்ரீமா | காளிராஜன் | ரமேஷ் அலமேலு |
| மகிமா | காளிதாஸ் | சரத்குமார் |
| ராஜ மகேஷ் | தியாகராஜன் | உமாராணி |
| சபிதா | திருமுருகன் | மாதவன் |
| வடிவேலன் | வெங்கடேச முத்து | சீனிவாசன். காஞ்சிபுரம் |
| தனராஜன் | சசிகுமார் | கார்த்திகேயன். ஆவடி |
| கல்யாணி | சிவகுமார் | கார்த்திகேயன். சிவகாசி |
| ஸ்ரீதுல்தாஸ் | முரளி மோகன் | பாலாஜி. சிவகாசி |

AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்ங ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

Account Name: **Aathi Margha Neethi Avai**
Account Number: **50200047470073**
IFSC: **HDFC0000323**
Branch: **Mylapore**



Copyright © AMNA Trust, Chennai

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

*Twitter Page: https://twitter.com/TrustAmna*

*Instagram: https://www.instagram.com/amnatrust*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்சிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Vijaya Shankar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 21 - Month: April 2023*